36

# நபிகள் திலகம்

(ஷல்)

ஆக்கியோன்

மௌலவி அஹ்மத் ஸயீத்
"ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர்

[மூன்றும் பாகம்]

பிரசுராலயம்

"ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலை,
நெ. 47, சேம்புதாஸ் தெரு,
சென்னை.

1932 [தபால் சார்ஜ் வேறு.

Q7:31
M32·3
68613

# முகவுரை

புகழனைத்தும் அண்டபிண்ட சராசரங்கள் யாவற்றையும் படைத்த எல்லாம் வல்ல இறைவனுக்கே உரித்தாகுக !

ஆண்டவனது அருளும்சாந்தியும் கொண்டல்நிழலிடப்பெற்றகோமான்நபிபெருமான்நபிகட்டிலகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது தோழர், பந்து, மித்திரரனைவர் மீதும் உண்டாவதாகுக !

நந்தென்னாட்டின்கண்ணேநிறுவப்பெற்றுள்ள "மஹம்மடன்ஸ்கூல்" முஸ்லிம் பாடசாலைகளிலும் மற்றும் பள்ளிக்கூடங்களிலும் கல்விபயிலும் முஸ்லிம் சிறுர்கள் அன்னவர்களதுமதாசார நடையொழுக்கங்களையும், மதபோதனைகளையும்அறிந்துகொள்ளத்தக்க பாடப்புத்தகங்கள்தாய்ப்பாஷையாம் தமிழில் இல்லையென்ற குறையை நிவர்த்திப்பான் வேண்டிநல்லொழுக்கம்,அறிவுசாந்தம்,சற்குணம், பரோபகாரம் சமத்துவம்சகோதரத்துவம்முதலிய சிறந்தஅம்சங்களை நஞ்சிறுர்களுக்குஅளிக்கவல்ல புத்தகங்களை இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்திஅக்குறையை நிவர்த்திக்கவேண்டுமாகநந்தமிழ்நாட்டிலுள்ள பல முஸ்லிம் சங்கங்களும், முஸ்லிம் பாடசாலைகளின் தலைமை யாசிரியர்களும், மற்றும் பொது ஜனங்கள தனவான்களும்பன்னாட்களாக நம்மிடம்நேரிலும், கடிதங்கள்மூலமாகவும்,நமக்குப்பெருஞ்சபைகளில் அளித்துள்ள உபசரணைப்பத்திரங்கள் வாயிலாகவும் வற்புறுத்திவேண்டிக் கொண்டமைக் கிணங்க நமக்குப் பல்வேறு வேலைகளின்

தொந்தரைகளால் உடனே அவ்வேண்டுகோளை நிறைவேற்றிக்கொடுக்க முடியாமலிருந்ததெனினும், தற்போது அவ்வேண்டுகோள் அளவுக் கதிகமாய் நம்மிடம் குவிந்திருப்பதை முன்னிட்டு **"நபிகள் திலகம் (ஸல்)"** என்ற இந்நூலை இயற்றியுள்ளோம். இஃது முஸ்லிம் இளைஞர்களுக்கு மட்டுமின்றி மற்றும் இதர மதச் சிறுவர்களுக்கும் நல்லொழுக்கம், நன்னடத்தை, சற்குணம் முதலிய உயரிய அம்சங்களை பயக்கனவாகு மென்பதையும், எந்த மதத்தினருக்கும் எத்தகைய ஆக்ஷேபகரத்துக்குரிய விஷயங்களெதுவும் இந் நூலில் கிடையாவென்பதையும் இதன் வாசகர்கள் நன்கறியலாம்.

839
297.61

சிறுவர்கள் மிக்க இலகுவில்தெரிந்து கொள்ளும் வழியில் செந்தமிழ் எளிய நடை இனிய வியாசத்தில் இந்நூல் வரையப் பெற்றுள்ளது. இதில் உபயோகப்படுத்தப் பெற்றுள்ள ஒரு சில "அரபு"ப் பதங்கட்கு ஆங்காங்கு நேர் தமிழ்ப்பொருள் கூறப்பட்டுள. இந்நூல் மூன்று பாகங்களாக இயற்றப்பட்டுள்ளது.

முதலாவது பாகத்தில் அரேபியா தேச நான்கெல்லை; தேச வனப்பு, விஸ்தீரணம், இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரேபியா நிலைமை, லோக தயாளர் நபிகட்டிலகம் (ஸல்) அவர்களின் ஜனனம், மதலைப்பருவம், பால்ய பருவம், அவ்வமயம்பெருமானவர்களின்நடை, ஒழுக்கம், நபித்துவம், கிடைக்கப் பெற்ற வரலாறு, பெருமானவர்கள் இஸ்லாத்தைப் பரத்தச் செய்த போதனமுறைகள், மக்காநகர்விட்டு மதீனாவிற்குஹிஜ்ரத்துசெல்லல், மதீனா நகர்சென்ற முதல் இரு ஆண்டுகள் வரை நடந்த நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன

839
297.63



இரண்டாவது பாகத்தில் ஹிஜ்ரி இரண்டாவதாண்டு முதல்13-வதாண்டு பெருமானவர்களின்வபாத்து (விண்ணுலக யாத்திரை)வரைஉலக மன்பதைகளுக்குப்பெருமானவர்கள்செய்த பேருபகார ஊழியங்களும், அவ்வாண்டுகளில் நடைபெற்ற அபூர்வநிகழ்ச்சிகளும் பொதிந்துள்ளன.

மூன்றாவது பாகத்தில் நபிபிரான் (ஸல்) உலக மாந்தர்களுக்குச் செய்த பிரசங்கங்கள், ஹிதோபதேசங்கள், அவர்களது திருச்சபை நடை ஒழுக்க முறைகள், அவர்களது சிறந்த தூய குணாதிசயங்கள், பரோபகாரம், அன்னிய மதத்தினரோடு நடந்துகொண்ட நேசபான்மை, சமத்துவம், சகோதரத்துவம், ஆண்டவன் மீது நம்பிக்கை, பெருமானவர்களின் எளிய வாழ்க்கை முதலியன கூறப்பட்டுள.

இந்நூல்மார்க்க அறிஞர்களாயஉலமாக்களாலும்,சரித்திர நிபுணர்களாலும்பெரியோர்களாலும்ஏகோபித்துஒப்புக்கொள்ளப்பட்டஎம்பெருமான் நபிகள்திலகமவர்களின்தூய வாழ் நாள்ச்சரிதைகளை ஆதாரமாகக்கொண்டுவரையப்பட்டுள்ளது.இதில்சந்தேகவிஷயங்களோ,மிகைப்படக்கூறப்பட்ட விஷயங்களோ கூறப்பட்டில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

இந் நூலில், பெரியார்களின் பெயர் நாமங்களை கூறுங்கால் ஸல், ரலி, ஆகிய குறிப்புகள் மரியாதைக்காகச் சொல்லவேண்டியபதங்களின்சுருக்கமாகும். "ஸல்"என்பது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்பதின் சுருக்கம்,'ரலி, என்பது ரலியல்லாஹு அன்ஹு என்பதன்சுருக்கம்; இவற்றை இந்நூலைப் படிப்பவர்களும் படிப்பிப்பவர்களும் கவனிப்பார்களாக!

## மதிப்புரை

வேலூர் மத்ரஸயெ பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தென்னும் அரபி சர்வ கலாசாலையின் நாஜிர் (Principal) கான்பஹதூர் ஆலீ ஜனுப் மௌலானு மௌல்வீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் அவர்களும், அக்கலாசாலையின் தலைமையாசிரியராய ஆலீஜனுப் "ஷம்ஸுல் உலமா" மௌலானு மௌல்வீ அல்ஹாஜ் முஹம்மத் அப்துல் ஜப்பார் சாஹிப் அவர்களும் இந்நூலுக்குக் கொடுத்துள்ள மதிப்புரை வருமாறு:—

சென்னை ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் ஜனுப் மௌல்வீ அஹ்மத் ஸயீத் சாஹிப் அவர்களால் தமிழ் பாஷையில்இயற்றப் பெற்ற "நபிகள் திலகம்" என்ற நூலை நாங்கள் கவனமாகப் படித்தோம். இந்நூல் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் வாழ்நாள்ச் சரிதையில் மிக மேலானதாகவும், சிறுர்கட்குசற்குணம்,நல்லொழுக்கம்,நன்னடக்கை பரோபகாரம் முதலியசிறந்தகுணங்களை யளிக்கக்கூடியதாகவும்,யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டஉண்மை விஷயங்களையே அடக்கிக்கொண்டதாகவுமிளிர்கின்றது. இவ்வரிய நூலை இயற்றிய ஆசிரியர் மவ்லவீ சாஹிப் அவர்களை யாங்கள் மிகமிகப் பாராட்டி ஆசி கூறுகின்ருேம். இந்நூலை எம் முஸ்லிம் பாடசாலைகளில் பாட புத்தகமாக ஏற்படுத்தி பள்ளிச் சிறுர்களுக்கு படிப்பிக்கவேண்டியது அத்தியாவசியமெனக் கருதுகின்ருேம்.

(ஒப்பம்) ஜியாவுத்தீன் முஹம்மத்
(கானலில்லாஹி தஆலா)

(ஒப்பம்) முஹம்மத் அப்துல் ஜப்பார்
(அபா அன்ஹு)

# முதலாவது அத்தியாயம்

நபித்துவத்தின் மாண்பு

இவ்வுலகத்தின்கண்ணே தோன்றிய நபிகள் அனைவரினும் நமது நபிகள்நாயகமவர்களுக்கே சிறப்பாகப் பல அரும் பெருந்தன்மைகள் உரியன என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. இதர நபிமார்களிடமில்லாதனவும், நபிகள் நாயகமவர்களிடமே காணப்படுவனவுமாய உயரிய பல குணங்களை பல முக்கிய ஹதீதுகளிலிருந்து அறிஞர்கள் எடுத்தெழுதி இருக்கின்றனர்.

“முன்னிருந்த எந்த நபிக்கும் கொடுக்கப் படாத ஐந்து அருங்காரியங்கள் எனக்குக்கொடுக் கப்பட்டிருக்கின்றன” என நாயகமவர்கள் கூறி னர்கள். அவைகளாவன:—1 எனக்கு ஏற்பட்டி ருந்த கம்பீரத் தோற்றம் மூலமாக வெற்றியும் உதவியும் அளிக்கப்பட்டது. 2 உலகத்திலுள்ள பூமியின் பாகங்கள் யாவும் எனக்கு ஸஜ்தாச் செய்யுமிடமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. 3 கனீமத் (போர்க்களத்தில் சிறை கொள்ளப்பட்ட) பொருள்கள் எனக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின் றன. வேறு எந்த நபிக்கும் அவைகள் ஹாலா லல்ல. (ஆகுமானதன்று) 4 எனக்கு ஷபா அத்து

செய்யும் (இறைவனிடத்தில் அடியார்களுக்குப் பாபமன்னிப்பிற்காக மன்றுடும்) பாக்கியம் அளிக்கப்பட்டிருக்கிறது. 5 எனக்கு முன்னுள்ள நபிமார்கள் தங்கள் தங்கள் சமூகத்தினருக்கு மாத்திரம் நபியாக வந்தார்கள். நான் உலக முழுவதற்கும் நபியாக வந்திருக்கிறேன்."

வேறுஹதீதுகளில் மேற்கண்ட ஐந்து சிறப்பு களைத் தவிர்த்து நாயகமவர்களுடன் நபித்துவம் முற்றுப் பெறுவதும் ஆறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதர ஹதீதுகளில் இன்னும் பல அருஞ்சிறப்புகள் கூறப்பட்டிருக்கின்றன, எல்லா நபிமார்களின் உம்மத்துக்களைப் பார்க்கிலும் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகமான உம்மத்துகள் உண்டு என்பதும், நபிகள் நாயகமவர்களின் வஹீ (தெய்வ வெளிப்பாடு) இறுதி நாள் வரை என்றைக்கும் நின்றிலங்கும்படியான அற்புதமாகுமென்பது மாகும். இதனடியில் அவைகளிற் சிலவற்றை விளக்குவாம்.

### கெம்பீரத் தோற்றம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் உலகிற் றேன்றிய நபிமார்கள் யாவரையும் இரு வகையாகப் பிரிக்கலாம். வெளித் தோற்றத்தில் உதவியற்றவர்களைப் போலவும், பலஹீனர்களைப் போலவும் தோற்றியவர்கள் ஒரு வகை. இவர்

களுக்கு உலக அதிகாரமெதுவு மிருக்கவில்லை. இவ்வகையினர் தாம் நபிமார்களில் அதிகமாக இருந்திருக்கின்றனர். உலக அதிகாரங்களைப் பெற்றவர்கள் மற்றொரு வகையாயினராகும். இவர்கள் மிகச் சொற்பமானவர்கள். உதாரணமாக ஹஜ்ரத் மூஸா, ஹஜ்றத் தாவூத், ஹஜ்ரத் சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) முதலியவர்களாகும். இவர்களில் ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களோ, பனூ இஸ்ராயீல்களை எகிப்தின் கொடுங்கோலரசனை 'பிர்அவ்ன்' அவன் குழாத்தினர் இவர்களை விட்டும்காப்பாற்றி ஷாம்தேசத்தின்எல்லைப்புறத்திற்குஅழைத்துச்சென்றார்கள். ஆயினும்அத்தேசத்திலிருந்த சிலைவணக்கக்காரர்களோடுஎதிர்த்துப்போர்புரியவேண்டியதாயிற்று போர் நடத்துகொண்டிருக்கும் காலத்திலேயே ஹஜ்றத் மூஸா (அலை) அவர்கள் இவ்வுலகை விட்டகல நேர்ந்தது. ஆகவே, இவ்வுலகத்திலேயே பூரணவெற்றியோ, பூரண ஆதிக்கமோ, மூஸா (அலை) அவர்கட்கு ஏற்படவில்லை.

ஹஜ்றத் தாவூத் (அலை) அவர்களோ அரசுரிமையைப் பெற்றார்கள். ஆனால், தங்கள் வாணாள் முழுதும் அழுகையிலும் பிரலாபத்திலுமே கழித்தார்கள். அவர்கள் பால் இரக்கங் கொண்டு அவர்களின் துக்கம் நிறைந்த இஸ்ல

மிய அழைப்பிற்குச் செவி கொடுத்தவர் ஒருவரு மில்லை.

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆரம்பக்காலமோ, திக்கற்ற நிலைமையிலிருந் தது. வறுமையோ சொல்லத் தரமற்றதாக இருந்தது. ஆனல், அவர்களின் பிற்கால வாழ் வில், மூஸா (அலை) அவர்களுக்கிருந்த சேனு பலமும், தாவூத் (அலை) அவர்களுக்கு இருந்த அரசாங்க அதிகாரமும், சுலைமான் (அலை) அவர் களுக்கிருந்த ஆதிக்கமும், மகத்துவமும் நிறை ந்து ததும்பி மிளிர்ந்தன. எனினும், இத்தகைய அரும் பெரும் பாக்கியங்களெல்லாம் அல்லாஹ் வின் பாதையிலேயே செலவாயின. இதனுல் வழிதவறியவர்கள் நேரான பாதையை அடைந் தனர்- மறந்தவர்கள் மறதி நீங்கப்பெற்றனர். நாயகமவர்களின் அழைப்பின் தொனியைக் கேட்டவர் அடிபணிந்தனர். உலக ரக்ஷகர் (ஸல்) அவர்கள் எப்பாதை வழியாகச் சென்றுர் களோ அந்தப்பாதையிலுள்ள பாபிகளும் குற்ற வாளிகளும் அவர்களுக்குத் தலைவணங்கி வழிப் பட்டனர். தங்களின் பாபமான காரியங்களை நினைத்து நினைத்துக் கரைந்தனர்.

"எனக்குக் கிடைத்த வெற்றிகளும், உதவி களும் எனக்கிறைவனுல் அளிக்கப்பெற்றிருந்த கெம்பீரத் தோற்றத்தினுல் கிடைத்தன" என

நாயகமவர்களே கூறியிருக்கின்ருர்கள். "என்ஊைப்பற்றிய அச்சமானது நீண்ட தூரம்வரை ஜனங்களிடமிருந்து வேலை செய்தது" என்றும் அவர்கள் மற்ெருரு முறையும் கூறி இருக்கின்ருர்கள். பெரும் பெரும் சுத்த வீரர்கள் நாயகமவர்களை வெட்டிவிட வாட்களை உருவிக்கொண்டு வந்தனர். ஆயினும், நாயகமவர்கள் திருமுகப் பிரகாசமானது அவர்கள் மீது பட்டவுடன், அவ்வீரர்கள் விதிர் விதிர்த்து நடு நடுங்கி அடிபணிந்து விட்டனர் என்பதையும், கட்டுங்கடங்காத கபீலாக்காரர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் தாங்களாகவே அடங்கி ஒடுங்கிப் போயினர் என்பதையும் நாயகம் (ஸல்) அவர்களின் சரித்திரத்திலிருந்து அறியலாம்.

---

# இரண்டாவது அத்தியாயம்

---

## உலகமெல்லாம் தொழுமிடம்

இஸ்லாமல்லாத, ஏனைய மதத்தினர்பலரும் தங்கள் வணக்க ஸ்தலத்திற்காக நான்கு சுவர்களுள்ள ஒரு கட்டிடத்தை அமைத்து வைத்துக் கொண்டுள்ளனர். யூதர்கள் தங்கள் கோவிலையும் பலி கொடுக்கும் இடத்தையுந் தவிர வேறு எவ்விடத்திலும் இறைவனை இறைஞ்ச முடியாது

கிறிஸ்துவர்களோ தங்கள் மாதா கோவிலுக்கு வெளியில் இறைவனை வணங்க மாட்டார்கள். விக்கிரஹ ஆராதனைக்காரர்களும் தங்கள் தேவாலயத்திலேயே தங்கள் தேவதைகளை சந்தோஷப் படுத்தும் வழக்க முள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அகில உலக மதமாகிய இஸ்லாத்தின் நாயகனோ, மண்ணாலும், கல்லாலும், சுண்ணும்பாலும், (தற்காலத்தில்) இருப்புத் தூண்களாலும் இயற்றப்பெற்ற கட்டிடங்கட்குள்கட்டுப் பட்டிருக்கவில்லை. அவன் சர்வ வியாபி. எந்த இடத்திலிருந்தும் அவனை வணங்கலாம். மலை, மடு, காடு, வனாந்திரம், மஸ்ஜிது ஆகிய எந்த இடத்திலும் அவனுக்கு "ஸஜ்தா"ச்செய்யலாம். "உலகம் முழுவதையும் இறைவன் எனக்கு ஸஜ்தாச் செய்யுமிடமாக அமைத்து இருக்கிறான்" என நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்கள். இவ்விடயம் மேல் பார்வைக்கு மிகச் சாமான்யமானதாகத் தோன்றியபோதிலும், அதற்குள் இஸ்லாம் மதம் அகில உலக மதமாக இருக்கிறது என்பதும், இதுதான் இறுதி மதம் என்பதுமான உண்மை நுட்பங்கள் புதைந்திருக்கின்றன.

### அதிகமான உம்மத்துகள்

லக்ஷக்கணக்கான நபிமார்கள் இவ்வுலகில் தோன்றி இருக்கின்றனர். ஆயினும், இவ்வுல

தில் அவர்களின் போதனையைப்பற்றிய ஞாப கார்த்தம் ஒன்று கூட தற்போதில்லை. சரித்திரங் களிற் கூட அவர்களில் பெரும்பான்மையோரின் நாமதேயங்களைக் காண முடியவில்லை. ஆனால் சிலருடைய சரித்திரம் மட்டும் இப்பொழுது அறியப்படுகிறது. எனினும் அது பெருமான வர்களுடைய சரித்திரத்தைப்போன்று சம்பூர்ண மாயில்லை.

ஒருதரம் நபிகள் நாயகமவர்கள் கூறியதா வது 'எனக்கு எல்லா நபிமார்களின் உம்மத்துக ளின் மதிப்பை எடுத்துக் காண்பிக்கப்பட்டன. சில நபிமார்களுக்குப் பின் இரண்டொருவர் மாத்திரமே இருந்தனர். சில நபிமார்கள் அவர் கள் மாத்திரமே தனிமையாகத் தோன்றினர். இதற்கிடையே ஒரு பெருங்கூட்டத்தினர் தோன் றினர். இவர்கள் என்னுடைய உம்மத்துகளாக இருக்கலாம்என்றஎண்ணமுண்டாயிற்று. ஆனால் அவர்கள் மூஸா (அலை) அவர்களின் உம்மத்து கள் என்று அறிவிக்கப்பட்டது. பின்பு வேறு பக்கம் பார்க்கும்படி எனக்குக் கூறப்பட்டது. இதைப் பார்க்கிலும் மிகப் பெருங் கூட்டம் தோன்றிற்று. பின்பு மறுபக்கம் பார்க்கும்படி கூறப்பட்டது. அவ்வாறு பார்த்ததில் அங்கும் ஏராளமான கூட்டங்கள் தோன்றின. அப்பொ ழுது "இவர்கள் யாவரும் தங்களுடைய உம்மத்

துகள் என்று அறிவிக்கப்பட்டது.” என நாயக மவர்கள் கூறி இருக்கின்ருர்கள்.

### உலக நபி

நமது நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மற்றைய நபிமார்களைப் போன்று குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு மாத்திரமோ அல்லது ஒரு தேசத்தினருக்கு மாத்திரமோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ நபியாக எழுந்தருளவில்லை. உலகம் முழுவதிலுமுள்ள எல்லாசமூகத்தினருக்கும், எல்லாவர்ணத்தவருக்கும், எல்லாக்காலத்திற்கும் எல்லா வகுப்பினருக்குமே நபியாக அனுப்பப் பட்டார்கள். ஆகவே, அவர்களைப் போற்றும் விஷயத்தில், அவர்களைப் பின்பற்றும் விஷயத்தில், அவர்களின் அழைப்புக்குச் செவி சாய்க்கும் விஷயத்தில் இந்தியர், ஆப்ரிக்கர், சீனர், ஐரோப்பியர், அமெரிக்கர், நிக்ரோ ஜாதியர், அராபியர், அஜமியர் என்ற பாகுபாடின்றி யாவரும் சம உரிமை பெற்றவர்களாகவே இருக்கின்றனர். எனவே பெருமான் (ஸல்) அவர்களின் ஜீவிய சரித்திரத்தைப் படிக்குங்கால் அறபியர்கள் மாத்திரமின்றி, ஸல்மான்பார்ஸி, (றலி) போன்ற பாரசீகரும், ஸுஹைப் றூமீ (றலி) போன்ற உரோமரும், பிலால் ஹபஷீ (றலி) போன்ற நிக்ரோவரும் இஸ்லாத்தைத் தழுவி நாயகமவர்களின் ஸஹாபியாகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிருர்கள் என்பது தெரிய வரும்.

ஆகவே நாயகமவர்கள் அகில உலகத்திற்கும் பொதுவாக வந்த நபியென்பதில் எட்டுணையும் ஐயமின்று.

## மூன்ருவது அத்தியாயம்

### ஜவாமிஉல் கலீம்

(சொற்சுருக்கம் பொருள் விரிவு)

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வெளியாக்கப் பெற்ற வேதமாகிய திருக்குர்ஆனில் மற்ற வேதாகமங்களில் கூறப்பெற்ற எல்லா விஷயங்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. இதற்குத்தான் நாயக மவர்களுக்கு "ஜவாமி உல்கலீம்" (வார்த்தைகளைசேர்த்து அடக்கிக் கொண்டவர்) என்ற விசேஷப் பேர் கிடைத்தது. இவ் வேதத்திலோ தௌராத்தையுங் காணலாம். ஜபூரையும் பார்க்கலாம். இன்ஜீலையும் பெற்றுக் கொள்ளலாம். இவைகளல்லாமல் இன்னும் அதிகமான விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம். இவ் வேதத்திலோ ஜன சமூகத்தின் சரித்திரம். ஒழுக்கம், உபதேசம், பிரார்த்தனைகள், விண்ணப்பங்கள், பரிபூரணமான மதத்திற்குவேண்டிய எல்லாக் கொள்கைகள் முதலியன உண்டு. ஆகவே, குர்ஆனில் கூறப்படாமல் விடப்பட்ட விஷயமொன்றுமில்லை.

திரு குர்ஆன்தான் "ஜவாமிஉல்கலீமா"வாக இருக்கிறது. அதிலுள்ளஒவ்வொரு திருவசனத்

திலிருந்து வேத வியாக்யானிகள் நூற்றுக்கணக்கான விஷயங்களை எடுத்தோதுகின்றனர். அதன் ஒவ்வொரு பதத்திலிருந்தும் வேதாந்திகளும் சட்ட நிபுணர்களும் எண்ணிறந்த விஷயங்களை விளக்குகின்றனர். ஆத்ம ஞானிகளும் அநேக அபூர்வமான ஞானரத்தினங்களை அத்திருவசனத்திலிருந்தே கண்டுபிடித் தெடுக்கின்றனர். அவ்வாறிருந்தும் திரு குர்ஆனுக்குள் அமைந்திருக்கும் அபூர்வவிஷயங்களைஎடுத்துஎடுத்துஇன்னும்முற்றுப்பெறவில்லை. கலைஞானிகள் இன்னும்எத்துணையோவிஷயங்களையும் நுட்பங்களையும் எடுத் தறிவித்துக்கொண்டே இருக்கின்றனர். இத்தகைய பெரும் பாக்கியம் வேறெந்த நபிக்கும் இவ்வவனியில் இருப்பதாகத்தெரியவில்லை.

### மதப்பூர்த்தியாளர்

இஸ்லாம் மதத்தின் வேதமும், நாயகமவர்களுக்கு இறைவனலருளப் பெற்றதுமான, திரு குர்ஆன் "ஜவாமிஉல் கலீமா"வாக இருப்பதால் அவ்வேதம் எந்த மதத்தைப் போதிக்கிறதோ அம்மதமே பூர்த்தியானது என்பதுதானே விளங்கும். இதைத்தான் இறைவனும் "இன்று நான் உங்களுக்கு உங்கள் மதத்தைப் பூர்த்தி செய்தேன்" எனக் கூறியுள்ளான்.

குர்ஆன் ஷரீப் கூறுவதற்கேற்ப, இஸ்லாம் மதமானது அந்தந்தக் காலத்தில் தோன்றிய ஒவ்வொரு நபிமார்களும் காட்டியதும், அவர்கள் ஒவ்வொருவரிட மிருந்து அபிவிருத்தி யடைந்ததுமான மதமாகும். இறுதியாக அம்மதமானது நபிகள் நாயகமவர்களால் பூர்த்தி யடைந்தது. இவ்வாறு பரிபூரண நிலைமைக்குக் கொண்டு வரும் பாக்கியம் எம்பெருமானுர் நாயகம் (ஸல்) அவர்களுக்கே கிடைத்திருக்கிறது. இவ் விவரத்தை நாயகமவர்களே ஒரு உதாரணத்தால் விளக்கி இருக்கிறுர்கள். அவ்வுதாரணம் வருமாறு:—

எனக்கும் இதர நபிமார்களுக்கும் உதாரணம் யாதெனில், "ஒரு மனிதன் ஒரு வீட்டைக் கட்டினுன். ஜனங்களெல்லாம் அதைச் சென்று பார்த்துத் திரும்பி வருகின்றனர். ஆனுல் அவர்கள் யாவரும் 'அவ்வீட்டில் ஒரு செங்கல் வைப்பதற்கு இடம் காலியாக இருப்பதைக் காண்கின்றனர். அத்தகைய கடைசிச் செங்கல் தான் நாளுகும்."

அதாவது கட்டிடம் என்பது மதமும், நுபுவ்வத்துமாகும். அதிலுள்ள ஒவ்வொரு செங்கலானது ஒவ்வொரு நபிமார்களையும் அவர்கள் காட்டிய மதத்தையும் குறிக்கும். ஆகவே அம்மதத்தைப் பூர்த்தி செய்வதும், கடைசி

நபியுமாக இருப்பதும் நமது நாயகம் (ஸல்) அவர்களே யாவர். ஆகவே, இதிலிருந்து இனி மேல் வேறு வேதமோ வேறு நபியோ இல்லை என்பது மலையிலக்காம்

### நித்திய அற்புதம்

முன்னுள்ள மதங்களைக் கொண்டு வந்த நபிமார்கள் ஆண்டவனின் தூதர்களே என்ற விஷயத்திற்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட அற்புத நிகழ்ச்சிகளும் குறிப்பிட்ட அக்கால வரம்பில் தான் இருக்க வேண்டியதாக இருந்தன. ஆதலால்தான் முன்னுள்ள நபிமார்களுக்கு இறைவனலருளப் பெற்றிருந்த அற்புதங்கள் இப்பொழுது இல்லாமற் போயின. மூஸா (அலை) அவர்களின் அஸாவும், தாவூத் (அலை) அவர்களின் சங்கீதத் தொனியும், யூஸுப் (அலை) அவர்களின் சொற்பன தார்ப்பரியமும், ஸாலிஹு (அலை) அவர்களின் ஒட்டகமும் இக் காலத்திலில்லை.

ஆனால், நமது நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக வந்த மதமோ இறுதி நாள் வரையுள்ளதாகவும், பரிபூரணமானதாகவு மிருப்பதால், அந்த இறுதி நாள்வரை அம்மதத்தின் உண்மையை உலகத்தாருக்கு எடுத்தறிவிப்பான் வேண்டி ஆண்டவன் நித்திய அற்புதத்தை

நாயகமவர்களுக்கு அளித்திருக்கின்றான். அவ்வற்புதமானது நாயகமவர்கள் காலந் தொட்டு இன்றைவரை இருந்து வருவதோடு, உலக மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையை எடுத்தறிவித்துக்கொண்டும் நிகழ்ந்திருக்கின்றது. இனிமேலும் இறுதிநாள் வரை அவ்வாறே எடுத்தறிவித் திலங்கும். அத்தகைய நித்திய அற்புதமானது இஸ்லாத்தின் திருவேதமாகிய குர்ஆன் மஜிதேயாகும். ஏனைய நபிமார்களுக்கு அளிக்கப் பெற்ற வேதங்கள் இறைவனாலருளப் பெற்றவை என்பதிற் சந்தேகமில்லை, யாயினும் இவ்வேதத்தில் சிறப்புத் தன்மையாக இருக்கிற நித்திய அற்புத சக்தியானது அவ்வேதங்களிலில்லை. அதனாற்றான் அவ்வேதங்கள் மக்களால் புரட்டப்பட்டும், திருத்தப்பட்டும், சிதைவுண்டும் போயின. திரு குர்ஆனே நித்திய அற்புதமாக விளங்குவதால், அத்தகைய சிதைவுக்கு இடமில்லாமல் இறைவனால் காப்பாற்றப் பெற்று வருகின்றது. ஆகவே, வேதங்களில் எத்தகைய மாற்றமோ, திருத்தமோ இல்லாமல், ஆதியில் எவ்வாறு அருளப் பெற்றதோ, அவ்வாறே இற்றை நாள்வரை யிலங்கி வரும் வேதம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பெற்ற திரு குர்ஆன் ஒன்றைத் தவிர வேறொன்றும் இக்காசினியில் கிடையா.

# நான்காவது அத்தியாயம்

---

## பெருமானவர்களே இறுதி நபி

நாயகமவர்கள் நபிமார்களுக்கு முத்திரையானவர்கள், அல்லாஹ்வின் ஹபீபு, அவனின் திரு'தூதர், நபிமார்களின் தலைவர், சிருஷ்டிகளில் மிக்கார். ஆயினும் ஆண்டவன்மீது அளவிலா அச்சம் கொண்டவர்கள். எனக்கு யாது நேரும் என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாது என்று அவர்கள் கூறுவார்கள். காற்று பலமாக அடித்தால் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே கிப்லாவின் பக்கமாகத்திரும்பி 'நாயனே! நீ அனுப்பிய முஸிபத்தை விட்டு உன்னிடம் அபயந் தேடுகிறேன்' எனப் பிரார்த்திப்பார்கள்.

ஹஜ்ரத் ஆயிஷா நாயகி அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து தாங்கள் ஏன் இவ்வாறு சஞ்சலப்பட்டீர்கள் எனக் கேட்க, அதற்கு நாயகமவர்கள் 'காற்று' எனக்கூறி, தம் அருமை மனைவியை நோக்கி "ஆயிஷாவே! உனக்கு என்ன தெரியும்? ஹூத் (அலை) அவர்களின் உம்மத்துகளுக்கு நடந்த சம்பவம் வந்து விடாதா? அவர்கள் மேகத்தைப் பார்த்ததும் இது நம்முடைய வெள்ளாண்மைகளுக்குத் தண்ணீர் புகட்டும் என நினைத்துக் கூறினர்.

ஆனால் அதுவோ அவர்களுக்கு இறைவனால் அனுப்பப்பட்ட அபாயவேதனையாக இருந்தது" எனக் கூறினார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் நாயகமவர்களை நோக்கி "அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு நரை காணத் துவங்கி விட்டது" எனக் கூறினார்கள். அதற்கு நாயகமவர்கள் "திருகுர்ஆனிலுள்ள ஸூறத்துஹூதித், வாகிஆ, வல்முர்ஸலாத்து, அம்மயத்தஸா அலூன் ஆகிய அத்தியாயங்கள் என்னை நரைக்கச்செய்தன" என்றார்கள். ஏனெனில் இந்த அத்தியாயங்களில் கியாமத்து (உலகமுடிவு நாச) நாளைப்பற்றியும், இறுதி நாளிலுள்ள கேள்விகணக்கைப்பற்றியும் அல்லாஹ்வின் ஆதரவைப்பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ஸஹாபிகளைப்பார்த்து "ஜனங்களே! நான் அறிந்திருக்கிறவைகளை நீங்களும் அறிந்திருப்பீர்களேல் நீங்கள் குறைவாகச் சிரிப்பீர்கள் இன்னும் அதிகமாக அழுவீர்கள்" என்று கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நாயனின் மீதிருந்த பயத்தினால் பல சமயங்களில் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் ஓடுவதும், மன உருக்கம் ஏற்படுவதுமுண்டு. அவர்கள் பெரும்பாலும் தொழுகையில் உருகிக் கண்ணீர் வடிப்பார்கள்.

### அல்லாஹ்வின்பாலுள்ள அன்பு

உலகத்திலுதித்த நபிமார்கள் இருவகையினராகக் காணப்படுகின்றனர். ஹஜ்ரத் நூஹ், (அலை) ஹஜ்ரத் மூஸா (அலை) ஆகியவர்களைப்போல் எப்பொழுதும் அல்லாஹ்வுக்குப் பயப்பட வேண்டு மென்பதைப்பற்றியே போதிக்கக் கூடியவர்கள் ஒரு சாரார். ஹஜ்ரத் யஹ்யா, (அலை) ஹஜ்ரத் ஈசா (அலை) ஆகியவர்களைப் போன்று அல்லாஹ்வின்பால் அன்பு பூண்டொழுகுவதையும் பக்தியையும்பற்றிப் போதிப்பவர்கள் மற்றொரு சாரார். இஸ்லாம் மதமோ இவ்விரு தன்மைகளையும் ஒன்றுபோல் எடுத்துக் காட்ட விரும்புகின்றது. அதனுல் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்விரு தன்மைகளும் ஒன்றுபோல் காணப்படுகின்றன.

அவர்கள் இராக் காலங்களில் நெடு நேரம் வரை நின்று வணங்குவார்கள். அதனுல் கால்களும் சுரந்து காணும். இதைக் கண்ட ஸஹாபிகளிற் சிலர் "நாயகமே தங்களுடைய பாபங்களை அல்லாஹ் ஏற்கெனவே மன்னித்து விட்டானே, தாங்கள் ஏன் இத்துணைக் கஷ்டம் எடுத்துக் கொள்ள வேண்டும்" என வினவ, அதற்கு நாயகமவர்கள் "நான் நன்றியறிதலுள்ள அடியானுக இருக்க வேண்டாமா?" எனக் கூறினுர்கள்.

அவர்கள் இவ்வாறு ஏன் வணங்க வேண்டும்? அவர்களோ பாபத்தை விட்டு ஆண்டவனது திருவாக்கின்படி பரிசுத்தப்படுத்தப்பட்டவர்களா யிருக்கிறார்களே என ஜனங்கள் நினைக்கலாம். எனினும் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியா ராக இருக்க வேண்டுமென்பதற்காகவே நாயக மவர்கள் அவ்வாறு வணங்கினார்கள். இதனால் தான் நாயகமவர்கள் “என் கண்களுக்குக் குளிர்ச் சியைக் கொடுக்கவல்லது தொழுகையிலுள்ளது” எனக்கூறி இருக்கின்றார்கள்.

அல்லாஹு தஆலாவின் அன்பிற்கு முன், உலகத்தையும் உலகத்திலுள்ள மற்றெல்லா விஷயங்கள் மீதுள்ள அன்பினையும் நாயகமவர் கள் ஒரு தூசென மதித்தார்கள். அவர்கள் மரணமடைவதற்கு ஐந்து தினங்களுக்குமுன் ஸஹாபிகள் நிறைந்த கூட்டத்தில் ஒரு பிரசங் கம் செய்தார்கள். அதில் அவர்கள் கூறியதா வது:--“இறைவன் இப்ராஹீம் (அலை) அவர் களைத் தன்னுடைய நண்பராக ஆக்கியதுபோல் என்னையும் தன்னுடைய அன்பராக செய்து கொண்டான். ஆதலால் உங்களில் ஒருவர் என க்கு நண்பராக இருப்பதைவிட்டு நான் நீங்கிக் கொள்கிறேன். எனினும், என்னுடைய உம்மத் துகளில் யான் ஒருவரை எனக்கு நண்பராக ஆக்

கக்கூடுமோயின் அத்தகையவர் அபூபக்கரே" எனக் கூறினர்கள்.

---

# ஐந்தாவது அத்தியாயம்

---

### தவக்கல் (நம்பிக்கை)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒவ்வொரு எழுத்தாக ஊன்றிப் படித்துப் பாருங்கள். இவ்வானத்தின் கீழ் எழக்கூடிய எல்லாவிதத் துன்பங்களும், துயரங்களும், கஷ்ட நஷ்டங்களும் நாயகமவர்களுக்குச் சம்பவித்திருக்கின்றனவென்பதை அறிவீர்கள். ஆனல், அவர்களின் திருவுளமானது எந்தச் சமயத்தும் மயக்கமடையவில்லை; வருந்தவில்லை; பதறவில்லை; அஞ்சவில்லை. அபூதாலிப் அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "சகோதரரின் புத்திர! இந்த வேலையை (இஸ்லாம் பிரசாரத்தை) விட்டு விடு" எனக் கூறினர். அதற்கு நாயகமவர்கள் "சிறிய தந்தையாரே! நான் தனித்திருக்கிறேன் என நினைத்துத் தாங்கள் இவ்வாறு கூறவேண்டாம். நியாயமும், சத்தியமும் நெடுங்காலம் தனித்திருக்காது. அரபியரும் அரபியல்லாதவரும் ஒரு காலத்தில் அந்த நியாயத்துடனே

யே சேருவார்கள் என விடை கூறினார்கள். இஃதே போன்று மற்றொருக்கால் நாயகமவர்கள் "என்னை இறைவன் தனித்துவிடமாட்டான்" என்றார்கள். மக்காவில் கஷ்டப்பட்டு மனமிடிந்த ஒரு ஸஹாபியை நோக்கி நாயகமவர்கள் "இறைவன் மீது சத்தியமாக இந்த மதம் பூரணமடையும் காலத்தில் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறொருவரின் பயம் முஸ்லிம்களுக்கு இருக்காது; அத்தகைய காலம் சீக்கிரம் வரும்" எனக் கூறினார்கள்.

ஒருமுறை காபிர்களெல்லாம் ஹரத்தில் கூடி, நாயகமவர்கள் இவ்விடம் வந்தால் அவர்களைத் துண்டந்துண்டமாக்கிவிட வேண்டுமெனச் சதியாலோசனை செய்து கொண்டிருந்தனர். இதை நாயகமவர்களின் செல்வப் புதல்வியாகிய ஹஜ்றத் பாத்திமா (றலி) அவர்கள் தெரிந்து நடுநடுங்கி நாயகமவர்களிடம் விஷயத்தை அறிவித்தார்கள். அப்பொழுது அவர்கள் தம் அருமைப் புதல்விக்கு ஆறுதல் கூறித் தண்ணீர் கொண்டுவரச் செய்து உலுச் செய்து கொண்டு நேராக ஹரம் ஷரீபுக்குச் சென்றார்கள். அங்கு சதிப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்த காபிர்கள் நாயகமவர்களைக் கண்டவுடன் தலை கவிழ்ந்து கலைந்து விட்டனர்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களுக்குஜீவனோபாயம், போதம் ஆகியவைகளில் பலவித நிலைமை ஏற்பட்டது. சில சமயங்களில் மஸ்ஜிது நபவிய்யில் பணமும் காசும் குவிந்துவிடும்.பின்பு சில தினங்கள் வரை தொடர்ச்சியாக இரண்டு மூன்று நாள் பட்டினி இருக்க வேண்டியதேற்படும். இவ்வித நிலைமையில் அவர்கள் பணம் வந்தபோது பட்டினி கிடக்கவேண்டிய நாட்களுக்காகப் பணத்தைக்கைங்கரியம் செய்துகொள்ளலாம். ஆனால் நாயகமவர்கள் அவ்வாறுசெய்வதே இல்லை. ஒருநாளின் வரவில் மறுநாளுக்காக மீதப்படுத்தி வைப்பதில்லை.அவர்களின் குடும்பத்தின் அன்றையசெலவுக்கு அத்தியாவசியமானவை தவிரமற்றவைகளை அன்றே அததற்குகந்தவர்கட்குத்தான தர்மம் செய்து விடுவார்கள். அவர்கள் தங்கள் வீட்டில் மறுநாளைக்கு வேண்டிய பணமோ சாமானோ இருந்தால் அன்றைய இரவில்வீட்டிற்குச் செல்லமாட்டார்கள். அவைகளைத்தான தருமஞ் செய்த பின்பே வீட்டில் காலடிஎடுத்து வைப்பார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் கடைசி நேரத்திலுங்கூட இவ்விதமாக ஆண்டவனின் மீது நம்பிக்கை வைப்பதை மறந்து விடவில்லை. ஹஜ்றத் ஆயிஷா நாயகி இடத்தில் சில தங்க நாணயங்களைக் கொடுத்து வைத்த

மை நாயகமவர்களுக்கு ஞாபகம் வந்தது. உட னே அவர்களை அழைத்து "ஆயிஷாவே! முஹ ம்மது (ஸல்) தன்னுடைய றப்பின் மீது நம்பிக் கையில்லாத நிலைமையில் அவனை சந்திக்கவா? போ! உடனே அந்த சொர்ணங்களைத் தானஞ் செய்துவிடு" எனக் கூறினார்கள்.

## பொறுமை, நன்றி மறவாமை

இவ்வுலகத்துதித்த மாந்தரில் ஒருவருக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய வெற்றிகளெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை யில் அவர்களுக்குச் சம்பவித்தன. ஆயினும் நாயகமவர்களின் இருதயக் கண்ணாடியில் பெரு மை, அகங்காரம் என்ற பிரதிபிம்பம் ஏற்படவே இல்லை. ஹாதிம்தையுடைய புதல்வரான "அதி" என்பவர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி இருந் தவர். இவர் நபிகள் நாயகமவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டதில் இவருக்கு நாயகமவர்கள் நபியா அல்லது நாடாளுபவரா என்ற சந்தே கம் உதித்திருந்தது. இந்த சந்தேகத்தை நீக் கிக் கொள்வதற்காக அவர் நாயகமவர்களை அணுகியக்கால் நாயகமவர்கள் அவரை வர வேற்று உபசரித்தார்கள். அதுபோழ்து ஒரு வயோதிக ஸ்திரீ வந்து நாயகமவர்களுடன் தனித்துப் பேச வேண்டுமென்று கூறவே, எம் பிரான் (ஸல்) அவர்கள் அந்தச் சபையைவிட்டு

அந்த ஸ்திரீயுடன் நின்று பேசிக்கொண்டே இருந்தார்கள். அந்த ஸ்திரீ தானாக முதலில் போகும் வரை நாயகமவர்கள் அந்த இடத்தை விட்டு திரும்பவே இல்லை. இந்தச் சம்பவத்தைக் கண்ட "அதி" என்பவருக்கு, அரசராக இருந்தால் வயோதிக ஸ்திரீயுடன் இவ்வளவு நேரம் வரை மனச் சங்கடமில்லாமல் நின்று பேசுந் தன்மை இராது என்ற எண்ணம் உதித்தது; அவருக்கேற்பட்ட ஐயப்பாடும் அகன்றது. உடனே நாயகமவர்களை நபியென மனமுடன் ஏற்று இஸ்லாத்தைச் சார்ந்தார்.

தாம் போர்முனையில் கைப்பற்றிய தேசங்களில் செல்லும்போது ஜெயசீலர்களுக்கு ஒரு வகைப் பெருமையும், குதூகலமும் ஏற்படுவதுண்டு. நாயகமவர்களோ, ஜெயசீலராக மக்காவிற் பிரவேசித்து "தீதுவா" என்ற இடத்தை அடைந்தவுடன் தங்கள் சவாரியை நிறுத்தி இறைவனுக்கு நன்றியாக ஸஜ்தா செய்தார்கள். இதற்குக் காரணம் என்னவெனில் ஆத்மார்த்த அருள் பெறுதவர்கள் தமக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம் சுயபலமும், வீரமும், முயற்சியும் என இறுமாப்புறுவர். அருள் பெற்ற பெரியார்களோ தங்களுக்கேற்படும் வெற்றிகளும் முன்னேற்றங்களும் புறக்கண்ணால் காணமுடியாத இறைவனின் திருக்கருணையாலேயே எனக்

கருதுகின்றார்கள். ஆதலின் அவ்விறைவனை வாயார வாழ்த்திப் போற்றுகின்றனர்.

ஒரு ஸஹாபி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அணுகி 'அல்லாஹ்வின் தூதரே! எல்லோரைப் பார்க்கிலும் அதிகமான கஷ்டம் யாருக்கு நேரிடும்' என வினவினார். அதற்கு நாயகமவர்கள் "நபிமார்களுக்குத்தான்; அவரவரின் நிலைமைக்கு ஏற்றவாறு" என விடை பகர்ந்தார்கள்.

ஹஸ்ரத் பீபி பாத்திமா நாயகி ஒருவர் தவிர ஏனைய ஆண் பெண் ஆகிய எல்லா சந்ததியினரும் நாயகமவர்களின் கண் முன் இளமைப் பருவத்திலும், வாலிபப் பருவத்திலுமாக இவ்வுலக யாத்திரையை முடித்துக் கொண்டனர். இத்தகைய துக்ககரமான நிகழ்ச்சிகள் நடக்கும் போது சில சமயங்களில் நாயகமவர்களின் கண்களிலிருந்து நீர்வருவது ஒன்றைத் தவிர நாவிலிருந்து நாயனை மறந்த பேச்சு ஒரு வார்த்தை கூட வந்ததில்லை.

இவ்விதமான சம்பவங்கள் யாவருக்கும் இடையிடையே உண்டாகலாம். என்றாலும் தொடர்ச்சியாக இடை விடாமல் துன்பங்களும், கஷ்டங்களும் ஒருவருக்கு உண்டாகி அதைச் சகித்துக் கொண்டிருப்பதாயின் அது அரியதோர் செயலேயாகும். நபிகள் நாயகமவர்கள் நபிப் பட்டம் பெற்று மக்காவிலிருந்த பதின்

மூன்று வருஷ காலத்தில் தாயிப், மக்கா ஆகிய நகரங்களிலுள்ள காபிர்கள் இஸ்லாமிய அழைப்பை எதிர்த்தும், பரிகசித்தும், ஏசியும், பேசியும், இடர் புரிந்தும், துன்பமுண்டாக்கியும் செய்த அநியாய அக்கிரமங்களைச் சகிக்கவேண்டியிருந்தது. பின்பு ஹிஜ்ரத் செய்தபின் மதீனாவில் வாழ்ந்த நாளில் எட்டு ஒன்பது ஆண்டுக் காலம் வரை யுத்தங்களுக்கும், ரத்தப் பெருக்குகளுக்கும் ஈடுபட வேண்டியதாயிற்று. விரோதிகள் இது சம்பந்தமாகச் செய்த சதியாலோசனைகளைக் கூறவும் வேண்டுமோ? இவைகளை எல்லாம் சகித்து ஸப்று என்ற பொறுமையைப் பூஷணமாகக் கொள்ளுவதற்கு நாயகமவர்களைத் தவிர வேறு யாராலும் இசைந்ததாமோ?

இவைகளை எல்லாம் பார்க்கினும், தாங்களாக ஏற்படுத்திக் கொண்ட சம்பவப் பலனைச் சகிப்பது அதிகக் கடினமானது, 'ஹிஜ்றத்துக்குப் பின் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்து பைத்துல்மால் நிறைந்திருந்தது. ஆனல் நாயகமவர்களின் திருக் கரமானது அந்தப் பொக்கிஷத்திலுள்ள பொருள்களை எல்லாம் தேவையுள்ளவர்களுக்கு அளித்த பின்பே ஆறுதலடைந்திருந்தது. இந்த சமயத்தில் தாங்களும் தங்கள் அஹ்ல பைத்துகளும் பசியாகவும் பட்டினியாகவும்இருந்து வந்தனர்.

இவைகளை யெல்லாம் நாயகமவர்கள் தாங்க ளாகவே செய்து கொண்டதெனலாம். பொறு மை இன்பத்தைப் பெறுவது இவைகளை உண்டு சுகித்து நன்றி செலுத்தும் இன்பத்தைப் பார்க் கினும் எத்துணையோ மடங்கு அதிகமாக அவர் களுக்குத் தோன்றிற்று.

---

# ஆறுவது அத்தியாயம்

---

## நாயகத் திருச் சபை

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச் சபை, சாதாரண உலக மன்னர்களின் சபைகளைப்போன்று ஆடம் பர முடையதன்று. அச் சபைக்குவாயிற் காப் பாளனும் மற்ற கட்டுத் திட்டங்களுமில்லை. ஆயினும் அச்சபையில் வேறு சபைகளில் காண் டற்கரிய ஒழுங்கும், மரியாதையும் அமைந்திருந் தன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருச் சபையில் ஜனங்கள் அரவமின்றி அசை வற்றுத் தலை வணங்கிய வண்ணமாய் உட்கார்ந் திருப்பார்கள். ஜனங்கள் பேசும் முறையையும் ஏற்படுத்தப் பெற்றிருந்தது. அம்முறை வம்சப் பெருமையையோ அந்தஸ்தின் உயர்வையோ பணப் பெருக்கையோ அடிப் படையாகக் கொண்டதன்று. ஆனால் அவரவரின் விழுமிய

நல்லொழுக்கத்தையும், உரிமையையும் பொறுத்தே ஏற்படுத்தப் பெற்றிருந்தது. முதலில் நாயகமவர்கள் ஹாஜத்து (தேவை) உள்ளவர்களைக் கவனிப்பார்கள். அவரவர்களுக்கு வேண்டிய தேவைகளை விசாரித்து அவைகளை நிறைவேற்றித் தருவார்கள்.

சபையின்கண்ணே அனைவரும் ஒழுங்காகவும், மரியாதையாகவும், தலை வணங்கி உட்கார்ந்திருப்பார்கள். நாயகமவர்களும் மரியாதையாகவே உட்காருவார்கள். பேசும் பொழுது சபை முழுவதும் அரவமின்றி இருக்கும். ஒருவர் பேசினல் அவர் பேசி முடியும்வரை வேருெருவர் வாய் திறவார். நாயகமவர்கள் ஒருவருடைய பேச்சையும் முறித்துப் பேச மாட்டார்கள். ஆனல், அவர்களுக்கு ஏதேனும் ஒரு பேச்சில் அருவருப்புத் தோன்றினல் அதை அப்படியே விட்டு விடுவார்கள். ஒரு கபீலா (வம்சத்தார்) இடமிருந்து எவரேனும் ஒருவர் வந்தால் அவருடைய அந்தஸ்திற்குத் தக்கவாறு அவருக்கு மரியாதைசெய்வார்கள். நாயகமவர்கள் ஒவ்வொருவரிடமும் முதலில் க்ஷேமலாபத்தை விசாரித்து விட்டுப் பின்பு ஏதேனும் தேவை இருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிப்பார்கள். பின்பு எவரேனும் தன்னுடைய நோக்கத்தை என்னிடம் தெரிவிக்க முடியவில்லை

யானல் அவருடைய நிலைமையைப்பற்றியும் தேவையைப்பற்றியும் என்னிடம் தெரிவியுங்கள்" எனக் கூறுவார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளூரி லிருக்கும் போதும், வெளியிடங்களுக்குப் பிரயாணஞ் செய்யும் போதும், பகிரங்கமாக வும், அந்தரங்கமாகவும், ஜனங்களுக்கு போதிப்பதையும், கற்பிப்பதையும், கைக் கொண்டிருந்தார்கள். இவைகளினல் நாயக மவர்களின் போதனையை அந்தந்தச் சமயத்தி லிருப்பவர்களே கேட்டுத் தெரிந்து நன்மைய டைந்து கொண்டிருந்தார்கள். ஆகவே நாயக மவர்கள் உபதேசம் செய்யப்போகும் விபரம் எல்லா ஜனங்களுக்கும் முன்னதாகவே தெரிவ தற்காகவும், விருப்பமுள்ளவர்கள் வந்து கேட்டு நன்மையடையட்டும் என்பதற்காகவும் உபதே சத்திற்காகச் சில நேரங்களைக் குறிப்பிட்டும் வைத்திருந்தார்கள்.

இவ்விதமான சபைகூடும் நேரம் பெரும்பா லும் பஜ்ருத் தொழுகைக்குப் பின்னரே யாம். ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் நாயகமவர் கள் மஸ்ஜிதில் தங்குவார்கள் என்றும், அதிசம யம் நாயகமவர்களின் திருச்சபை கூடும் என்றும் சில ரிவாயத்துகளில் கூறப்பட்டிருக்கின்றது. உபதேசமொழிகள் எத்துணை உருக்கமானதாக

இருப்பினும் நாடோறும் தவறுமல் கேட்பதால் மனிதன் அலுத்துப்போவதுண்டு. அந்த உருக்கமான உபதேசம் பயன்படாமற் போவதுண்டு. ஆகவே, நாயகமவர்கள் உபதேசம் செய்வதையும் பிரசங்கம் புரிவதையும் இடைவிட்டுச் செய்வது வழக்கம். இச்சபைகள் ஆடவர்களுக்கு மாத்திரமே இருந்தன. பெண்கள் இச்சபைகளில் ஆஜராக அவர்களுக்கு மிகசொற்ப சந்தர்ப்பமே கிடைத்துக்கொண்டிருந்தது. ஆதலால், அப்பெண்மணிகள் தங்களுக்கெனப் பிரத்தியேகமாகஒருநாளை நிர்ணயிருக்குமாறு கேட்டுக்கொண்டனர்.நாயகமவர்கள் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி அதற்கென ஒரு தினத்தைக்குறிப்பிட்டிருந்தார்கள்.மதசம்பந்தமானவினுவிடைகளில்சகலவிதமான கேள்விகளுக்கும் அனுமதி அளித்திருந்தார்கள். பெண்கள் சம்பந்தமான கேள்விகளை நம் பிராட்டிமார்களே நாயகமவர்களிடம் பெரும்பாலும் கேட்டு வந்தார்கள். சில சமயங்களில் நாயகமவர்கள் தங்கள்சஹாபிகளைப் பார்த்துச்சிலகேள்விகளைக்கேட்டு அவர்களின் நுட்பப் புத்தியையும் அறிவுற்றிரனேயும்ஆராய்வதுண்டு.

நாயகம் (ஸல்) அவர்களின் திருச்சபையில் ஒழுங்கும் மரியாதையும் கண்டிப்பாகக் கவனிக்கப்பட்டு வந்ததானுலும் சில சமயங்களில் மனேரம்மியமான விஷயங்களும் நடைபெறுவ

துண்டு. பிரசங்கிக்கும் ஆற்றலும், உபதேசவன்மையும் நபித்துவத்தின் ஓர் தலைமையான அம்சம் எனச் சொல்ல வேண்டும். இச்சக்தி இன்றி மையாததாய் இருத்தல் பற்றியே ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் 'பிர்ஔனிடம் சென்று உபதேசிக்க வேண்டுமென இறைவனின் கட்டளை பிறந்தபோது ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் நாயகனிடத்தில் துஆச்செய்து தாங்கள் கூறும் விஷயங்களை பிர்ஔனும், மற்றவர்களும் சரியாக உணர்ந்து கொள்வதற்காக தங்கள் நாவிலேற்பட்டிருந்த சிக்கலை நீக்கியருளுமாறு வேண்டினர்கள்.

இத்தகைய அபூர்வ ஆற்றல் நபிகள் நாயகமவர்களுக்கு இறைவனருளால் தானகச் சமைந்திருந்தது. அதாவது அறபுதேசம் முழுவதிலும் பிரசங்கவன்மையிலும் உபதேசிக்கும் ஆற்றலிலும் குறைஷிக் குலத்தவரும் பனூஸஅவாஸன் கிளையினரும் சிறந்து விளங்கினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ குறைஷிக் குலத்திலுதித்து பனூஸஅவாஸன் கிளையில் வளர்ந்தார்கள். ஆகவே பிறப்பாலும் வளர்ப்பாலும் பிரசங்க வன்மையுடையவர்களைக் கலந்திருக்கும் வசதி கிடைத்திருந்தது. இதனைக் குறித்தே நாயகமவர்கள் "நான் அறபுகளில் மிகவும் நாகரீகமாகப்பேசும் வன்மையுள்ளவன்; நான் குறைஷி

களிலுள்ளவன். என்னுடைய பாஷையானது பனூ ஸஅதுப்னி பக்கர் கோத்திரத்துப் பாஷையாகும்" என்று கூறி இருக்கின்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் எளிய நடையில் சொற்பெருக் காற்றுவார்கள். பிரசங்கம் செய்வதற்காக அவர்கள் தங்களின் திருக்கூட்டத்திலிருந்து புறப்பட்டார்களானல் அரசர்களைப்போல் ஆடம்பரமாகச்செல்லார்கள். அத்தகைய உடையும் அணியமாட்டார்கள். தங்கள் கையில் தடி ஒன்று மாத்திரம் இருக்கும்; சில சமயங்களில்வில்லை ஊன்றி அதில்சாய்ந்து கொள்வார்கள். மஸ்ஜிதில் பிரசங்கித்தால்கையில் தடி வைத்துக்கொள்வார்கள் போர்க்களத்தில் பிரசங்கிக்கும்போதுவில்லைஊன்றிச்சாய்ந்துகொள்வார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரசங்கிப்பதற்கெனக் கால வரையறை யேற்படவில்லை. யாதலால் அவர்கள் சமயம் நேர்ந்தபொழுது திடுமெனப் பிரசங்கிப்பார்கள். ஜனங்களின் மனதில் உணர்ச்சி யுண்டாக்க வேண்டியதாக இருப்பின் பிரசங்கத்தை வினுவிடைத் தோரணையிலேயே செய்வார்கள். எம்பிரான் (ஸல்) அவர்கள் நபியாகவும், ஜெயசீலராகவும், சேனுதிபதியாகவும் தலைவராகவும் இருந்தார்களாதலால் அவர்களின் பிரசங்கத்தின் போக்கும் அந்தந்த நிலைமைக்குத் தக்கவாறே இருந்தது.

# ஏழாவது அத்தியாயம்

## பெருமானவர்களின் பிரசங்கங்கள்

இஸ்லாம் ஆரம்ப காலத்தில் பெருமானவர்களுக்கு இறைவன் "வஅன்திர் அஷீரத்தகல் அக்ரபீன்" உங்களுடைய குடும்பத்தினருக்கு நீர் அச்சம்பூட்டி அறிவிப்பீராக!" என்ற வசனத்தை இறக்கியபோது நாயகமவர்கள் குறைஷியர்களை எல்லாம் ஒன்று கூட்டி ஒரு பிரசங்கம் செய்தார்கள். அப்பிரசங்கம் பூர்த்தியடைய அபூலஹப் சம்மதிக்கவில்லையாயினும் அதன் கருத்தை குறைஷியர் தெரிந்துகொள்ள நேர்ந்தது. அதன் விபரம் வருமாறு:—

உலகநாதர் (ஸல்) அவர்கள் ஸபாமலையின் மீதேறிக்கொண்டு, 'வாஸபாஹாஹ்' என்று சப்தமிட்டார்கள். காலை நேரத்தில் ஏதேனுமோர் கூட்டத்தினர் திடீரென தாக்க வருவார்களாயின் அதை அறிவிப்பதற்கு மேற்கண்ட பதத்தை அக்காலத்தைய அறபிகள் உபயோகிப்பது வழக்கம். எனவே, நாயகமவர்கள் கூறியதைக்கேட்டதும் குறைஷிகள் எல்லாம் வந்து ஒன்று கூடினர். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "இந்த மலைக்குப் பின்புறத்திலிருந்து ஒரு சேனை வருகிறது என்று நான் உங்களுக்குக் கூறினால் நீங்

கள் என் சொல்லை உண்மை என நம்புவீர்களா?" எனக் கேட்டார்கள். அதற்கு யாவரும் இது வரை தாங்கள் பொய் சொல்ல தாங்கள் கேட்டதில்லை எனப் பதில் கூறினர். அப்பொழுது நாயகமவர்கள் "உங்களுக்கு முன் இருக்கிற கடுமையான வேதனையைப்பற்றி நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன்" எனக்கூறினார்கள். உடனே அபூலஹப் இதற்காகத்தானா எங்களை ஒன்று கூட்டினீர் என அலக்ஷியமாகக் கூறிச் சென்றான், பிறரும் கலைந்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரசங்கத்தின் தன்மையானது அந்தரங்கத்தில் ஒரு பெரும் அற்புதமாகவே இருந்தது. இரும்பனைய மனத்தினரும் கூட அவர்களின் அமுத வாக்கைக் கேட்டுருகி விடுவர். ஒருமுறை நாயகமவர்கள் ஸூறத்து "வன்னஜ்மி"யி லிருந்து சில ஆயத்துகளை ஓதிக் காட்டி நாயகனுக்கு ஸுஜூது செய்தார்கள். அந்தச் சமயத்தில் அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் முஸ்லிம்கள் மாத்திரமேன் காபிர்களும் கூட நாயகமவர்களுடன் நாயனுக்கு ஸுஜூது செய்தனர். எம்பிரான் (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத்திற்கு முன் நண்பராக இருந்த ஒருவர் நாயகமவர்களுக்கு பித்தம் பிடித்திருக்கின்றதென நினைத்து (நஊது பில்லாஹி) அவர்களுக்கு மந்திரிக்க வந்தார்.

அப்பொழுது நாயகமவர்கள் அவருக்குச் சுருக்கமாக ஒருபிரசங்கம் செய்தார்கள். உடனே அவர் நாயகமவர்களைப்பார்த்து "முஹம்மதே! மீண்டும் ஒருமுறை அதனைக் கூறுங்கள்" என்றார். நாயகமவர்கள் அதைப்பன்முறைதிருப்பித்திருப்பிக் கூறினார்கள். உடனே அவர் "நான் அநேக புலவர்களின் விதவிதமான பாடல்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இதுவோ அவைகள் எல்லாவற்றினும்வேறொரு வஸ்துவாக இருக்கிறது" எனக் கூறினார்.

மக்காவை ஜெயித்தபோது நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷிகளுக்கு ஒருகுத்பா (பிரசங்கம்) செய்தார்கள். அது வருமாறு:—

"ஜனங்களே! அல்லாஹ்வைத் தவிர வேறு நாயகனில்லை. அவன் ஒருவன். அவனுக்கு இணையாருமில்லை. அவன் தன்னுடையவாக்கை உண்மை யாக்கினான். தன்னுடைய அடியானுக்கு உதவி செய்தான். கூட்டங்களையெல்லாம் அவன்தனியேயிருந்துசின்னபின்னமாக்கினான். கஅபாவின் மேற்பார்வையும், ஹஜ்ஜு செய்கிறவர்களுக்கு ஜல வசதி செய்வதையும் தவிர மற்றும் எல்லாவிதமான கர்வமும், கொலைக்காகவும் பொருளுக்காகவும் செய்யப்படும் தாவாக்களும் என்னுடைய பாதங்களின் கீழாக்கிவிட்டான். குறைஷுக்கூட்டத்தாரே! உங்களின் அறியாமை

க்காலத்திலுள்ள கர்வத்தையும் வம்சப் பெருமை யையும் ஆண்டவன் அழித்து விட்டான். மனி தர்களெல்லாம் ஆதம் (அலை) அவர்களின் சந் ததிகளே. ஆதமோ மண்ணினல் படைக்கப் பட்டவர் எனக்கூறி விட்டு கீழ்க்கண்ட கருத் துள்ள குர்ஆனின் வாக்கியத்தை ஓதினார்கள்.

"ஜனங்களே! உங்களை ஆணிலிருந்தும் பெண்ணி லிருந்தும் படைத்தோம்; நீங்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வதற்காகப் பல குடும்பமாகவும் கூட்டமாகவும் ஆக்கினேம்; ஆனல் எவன் பாவங்களை விட்டுப் பரிசுத்தமா யிருப்பானே அவனே ஆண்டவனிடத்தில் மேன்மையானவன் ; ஆண்டவன் பூரண ஞான முள்ளவன்; எல்லாவற்றையும் அறியக் கூடிய வன் ; சாராயம் விற்பதையும் வாங்குவதையும் ஆண்டவன் ஹராமாக்கி (விலக்கி) விட்டான்" என்பதே. ஹிஜ்ரி 10-வது ஆண்டு கடைசி ஹஜ் ஜின்போது ஒரு லக்ஷத்து இருபத்திநான்காயி ரம் ஜனங்கள் கூடியிருந்த கூட்டத்தில் பெருமா னவர்கள் செய்த பிரசங்கம் வருமாறு காண்க!

"ஜனங்களே! என் வார்த்தைகளை நன்கு கவனமாய்க் கேளுங்கள்! ஏனெனின் இவ்வரு ஷத்திற்குப் பின் இதே யிடத்தில் உங்களுக்கு மத்தியில் நான் இருக்கக் கூடுமென நினைக்க வில்லை. இன்று எந்த நாளென்று நீங்கள் அறி

வீர்களா? இன்று 'குர்பானீ' (பலி) யுடைய நாளாக யிருக்கும். இது எம்மாத மென்று உங்களுக்குத் தெரியுமா? இது பரிசுத்தமான மாதமா யிருக்கும். இஃது எந்த நகரமா யிருக்கும்? இது சிறப்புற்ற மக்கா நகரமா யிருக்கும். இவ்விடத்தையும், இம்மாதத்தையும், இன்றைய தினத்தையும் நீங்கள் எங்ஙனம் பரிசுத்தமாகக் கருதுகின்றீர்களோ அங்ஙனமே உங்களுடைய உயிரும்பொருளும், உங்களுடையகீர்த்தியும்கடைசி நாள் வரை உங்களுக்குப் பரிசுத்தமானதும் அபகரிக்கக் கூடாததுமா யிருக்கும். ஒருவருடைய பொருளையும் உயிரையும் கீர்த்தியையும் மற்றவர்கள் அபகரிக்கக் கூடாது. எனக்குப் பின் நீங்கள் வழி தவறக் கூடாது. ஒருவர் கழுத்தை மற்றவர் வெட்டக் கூடாது. நீங்கள் உங்கள் நாயனுடைய சமுகத்தில் செல்ல வேண்டியவர்களா யிருப்பீர்கள். அவன் உங்களிடமிருந்து கணக்கு விவரங் கேட்பான். அஞ்ஞான காலத்தில் (நீங்கள் இஸ்லாமாவதற்கு முன்) உண்டான கொலைக்குப் பழி வாங்குவது தள்ளுபடியாய் விட்டது. அஞ்ஞானகாலத்தில் ஏற்பட்ட வட்டி தொகைகளும் ரத்துச் செய்யப்பட்டன.

உங்களுடைய மனைவிகள் மீது உங்களுக்கு உரிமை யிருப்பதுபோல் அவர்களுக்கும் உங்கள் மீது உரிமை யுண்டு. உங்கள்

மனைவிகளை அன்புடனும் சாந்தத்துடனும் நடத்துங்கள். ஆண்டவனுக்குப் பயந்து நீங்கள் அவர்களின் உரிமைகளைக் கவனியுங்கள். உங்களுடைய அடிமைகளை நீங்கள் நல்லவிதமாய் நடத்துங்கள். நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் உடுத்துவது போன்ற ஆடையையே அவர்களுக்கும் உடுத்துங்கள். அவர்கள் குற்றஞ் செய்தால் மன்னியுங்கள். மன்னிக்கக் கூடாததாயிருந்தால் அவர்களை உங்களிடமிருந்து விலக்கி விடுங்கள். ஏனெனில் அவர்களும் ஆண்டவனுடைய அடியார்களே; அவர்களைக் கடுமையாய் நடத்துவது கூடாது.

ஜனங்களே! என்னுடைய வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள். கேட்டு நன்றாய் விளங்கிக் கொள்ளுங்கள். அஜமியர்(அரபியரல்லாதார்)களை விட அரபியர் மேம்பாடுடையவர்களல்லர் அரபியர்களை விட அஜமியர் சிறந்தவரல்லர். முஸ்லிம்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாயிருக்கின்றார்களென்பதை அறியுங்கள். நீங்கள் ஒரே சகோதரத்தி லுதித்தவர்கள். அனியாயஞ் செய்வதிலிருந்து நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய மத்தியில் நான் ஒரு விசேஷப் பொருளை விட்டு வைத்திருக்கிறேன். அதை நீங்கள் உறுதியாக

பற்றிப்பிடித்துக் கொண்டீர்களானால் நேர்வழியை விட்டும் தவறமாட்டீர்கள். அது "குர்ஆனா"யிருக்கும்.

ஜனங்களே! கிரியைகளில் பரிசுத்தமான எண்ணமும், முஸ்லிம்களின் நன்மையைக் கோரும் விருப்பமும், ஜமா அத்தில் (கூட்டத்தில்) ஒற்றுமையும் இம்மூன்றும் இருதயத்தைப் பரிசுத்த மாக்குகின்றன. இங்கு வந்திருப்பவர்கள் நான் கூறியவைகளை இங்கு வராதிருப்பவர்களுக்கு சொல்லவேண்டும். சிலசமயம் நேரில் கேட்பவனைவிட சொல்லப்படுபவனுடைய மனதில் நன்குபதியும் எனக் கூறிவிட்டு,

ஜனங்களே! ஆண்டவனுடைய கட்டளைகளை உங்களுக்கு நான் அறிவித்தேனாவென்று கியாமத் (நியாயத்தீர்ப்பு) நாளில் ஆண்டவன் உங்களை கேட்டால் நீங்கள் அதற்குஎன்னவிடை சொல்வீர்கள்எனக்கேட்க, அச்சனங்களெல்லோரும் "யாறசூலல்லா! ஆண்டவனுடைய கட்டளைகளை நீங்கள் எங்களுக்கு அறிவித்தீர்களென்றும், நபிக்குள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்றினீர்களென்றும் நாங்கள் உங்களுக்குச் சாட்சிச் சொல்வோம்" என்று சொன்னார்கள். பெருமானவர்கள் தங்கள் கையை வானத்தின் பக்கமாயுயர்த்தி "ஆண்டவனே! நீயே சாக்ஷியாயிருப்பாய்" என்று மூன்று தடவை கூறினார்கள். அதே சம

யம் ஆண்டவன் சமூகமிருந்து இன்றையதினம் உங்களுக்காக உங்களுடைய தீனை (மதத்தைப்) பூரண மாக்கினேன். என்னுடைய பாக்கியங்களை உங்கள் மீது பூர்த்தி செய்து விட்டேன். உங்களுக்காக இஸ்லா மதத்தை நான் உவந்தேன்" என்றகருத்துள்ள திருக்குர்ஆனின்வாக்கியமானது பெருமானவர்களுக்கு அறிவிக்கப் பட்டது.

---

## எட்டாவது அத்தியாயம்

---

### நாயகமவர்களின் ஹிதோபதேசங்கள்

(1) எத்தனை மனிதர்கள் விருந்துக்கு அழைக்கப் படுகின்றார்களோ அத்தனை பேர்கள் மட்டுமே செல்லல் வேண்டும். அதனைவிட அதிகம் பேர்கள் செல்லலாகாது. அங்ஙனம் அழைப்பின்றி எவரேனும் செல்லுவாராயின் அன்னவர் அழைப்பவரிடம் தமது வருகையை தெரிவிக்க வேண்டும். அவர் அனுமதியளித்தாலன்றி உள்ளேசெல்லலாகாது.

(2) எதுவரை யொருவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தம் மனைவி, மக்கள், தாய், தந்தை, எஜமான், குரு எல்லோரை விடவும், மேலும் தன்னுயிரை விடவும் அதிக விசுவாசகரமாக பாவிக்க மாட்டானோ அன்னவன் பரிபூரணமான ஈமான் உடையவனாகான்.

நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களை அதிகமாக விசுவாசிப்ப தென்பது அப் பெருமானவர்களுடைய அனுஷ்டானக் கட்டளையாகிய ஸுன்னத்'தின்படி நடந்தொழுகுவ தாகும். மேலும் 'பித்அத்'தான (நூதன) கருமங்களை வெறுத்துத்தள்ளுவதுமாகும். சத்தியஷரீஅத்துக்கு விரோதமாக எவரேனும் கூறுவாராயின் அதை ஏற்றுக் கொள்ளாதிருத்தல் வேண்டும். கலியாணம் போன்ற சந்தோஷ காலங்களிலும், மரணம் போன்ற துக்கக் காலங்களிலும் பெருமானவர்களின் அடிச்சுவட்டினைப்பின்பற்றி நடக்கவேண்டும். ஊழியம்,உத்தியோகம்புரியுங்கால்எஜமானின் திருப்திக்காகவென்றுஷரீஅத்துக்குவிரோதமான காரியங்களில் தலையிடக் கூடாது. எவரேனும் மாறுபட்டு இவற்றிற்கு முரண்பாடாக நடப்பாரானால் அவரது ஈமான் பரிபூரணமாகாது இன்னவர் பூரணமாக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது விசுவாசங் கொண்டவராகவுமாட்டார். ஆண்டவனே! உனதுகருணையினால் யாங்கள் திருநபி நாயகத்தை விசுவாசித்து நடப்பதற்குரிய பாக்கிய மருள்வாயாக!

(3) பிறர் தமக்களிக்கும் விருந்தழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வது சுன்னத்தாகும் அதை நிறைவேற்றுவது வாஜிபென்னும் கடமையாகும். அவர் அளிக்கும் உணவு மிக

கேவலமானதாகவும், அற்பமானதாகவு மிருப்பினும் சரியே; அதனைக் குறை கூறக்கூடாது.

(4) ஒவ்வொரு நாளும் பிரிதொரு மனிதரும் ஏதேனும் தருமமளிப்பது அத்தியாவசியமாகும். ஒவ்வொரு நாளும் ஆண்டவன் நமக்கு ஜீவியத்துக்குரியதை அளித்து நம் ஜீவியத்தை பயன்பெற்றதாக்குவது ஆண்டவனருளும்புதுப் பாக்கியமாகும். இறைவன் அங்ஙனம் தன் அடியார்க்கு நன்மைபருளுங்கால் அடியாரும் பிறர்க்கு தர்மமளித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும்.

ஆண்டவன் அளித்தவற்றிற்கு நன்றி செலுத்துவது, நியதிபுரிவது, நியாயம் வழங்குவது, காலோய்ந்துவிட்ட வழிப் பிரயாணியை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்வது, அப் பிரயாணியின் சுமைப்பொருட்களை சுமந்து கொண்டுபோய் கொடுப்பது, தொழுவதற்காகவென்று மஸ்ஜித்துக்குட்செல்வது, வழியிலுள்ள கல், முள் போன்ற தீங்கு தருபவைகளை அப்புறப் படுத்துவது, ஆகியவையெல்லாம் தர்மஞ் செய்வதும் தானம் புரிவதும், நன்றி பாராட்டுவது மாகும். இந்நன்மையான காரியங்களில் எதை செய்ய சாத்தியமிருக்கிறதோ அதை செய்ய வேண்டும். பொருளுக்காக தர்மமும் நன்றியும் செய்வதுபோல், நம் சரீர சுகத்துக்காகவும்,

சக்திக்காகவும்இவ்விதபரோபகாரமும், உதவியும் புரிந்து ஆண்டவனின் பொருத்தத்தையும் திரு வருளையும் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளக் கடவர்.

(5) ஹலாலான (ஆகுமான நீத) வழியில் சம்பாதித்த பொருள் சொற்பமாயினும் அதை ஆண்டவனுடைய பாதையில் தர்மஞ் செய்வது அபரிமிதமான புண்ணியத்தை யளிப்பதாகும்.

(6) "உன் மீது ஆண்டவனின் முனிவு உண்டாகுக" என்று எவரைப்பற்றியும் நீங்கள் சபிக்காதீர்கள் "உன்மீது ஆண்டவனின்கோபாக் கினி உண்டாகுக" என்று எவரைப்பற்றியும் கடிந்து கூறுதீர்கள் "நீ நரகத்தில் போய் விழக் கடவாய்" என்று எவரைப்பற்றியும் நீங்கள் மொழியாதீர்கள். இப்படிப்பட்ட கொடுமொழி களால் ஆண்டவன் அதிருப்தி யடைகின்றான்."

(7) "மனுஷ்யன் விருத்தாப்பியனுகி விடுங் கால் அவனுடைய இரு அம்சங்கள் வாலிபத் தசையை யடைகின்றன. அவையாவன:-1வது பொருளின் பேரிலுள்ள பேராசை. 2-வது புதிய வயது வேண்டுமென்ற ஆசை" என்பனவாகும். அவற்றை நீங்கள் தடுத்துக் கொள்ளுங்கள்.

(8) மனுஷ்யனிடம் இரு பெருங் களஞ்சி யங்கள் செல்வத்தால் நிறைந்து கிடப்பினும்

அவன் அத்துடன் மூன்ருவதைப் பெறுவதற்கும் யோசனை செய்து கொண்டிருப்பான். மனுஷ்யனுடைய வயிற்றை பூர்த்தியாய் நிறப்பவல்லது மண்ணைத் தவிர்த்து வேறென்றுமில்லை. எவனொருவன்பேராசையைவிட்டும் தவ்பா (பாபமன்னிப்பு)செய்கின்ருனே அவனுடைய தவ்பாவை ஆண்டவன்ஒப்புக்கொள்கிருன். அவனுடைய ஹ்ருதயத்தில் போதுமென்ற தன்மையைபோடுகின்ருன். ஆகவே மனிதன் பேராசையில் மூழ்கலாகாது. பேராசையானது ஆண்டவன்கட்டளைகள், தொழுகை, நோன்பு, ஹஜ், ஜக்காத் (மார்க்கவரி) ஆகியவற்றையும் மறக்கச் செய்து விடும்.

---

## பத்தாவது அத்தியாயம்

---

### பெருமானவர்களின் வாழ்க்கை

எம்பெருமானுர் (ஸல்) அவர்களிடம் நல்லொழுக்கம், சற்குணம், மனத்தூய்மை, சத்தியம், இரக்கம், மன உறுதி, தாழ்மை, கண்ணியம், நாணம், முகமலர்ச்சி, பொது நலம், நியதி, பராக்கிரமம், பொறுமை, ஆண்டவன்மீது பூரண நம்பிக்கை, ஆகிய எல்லா குணுதிசயங்களும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தன.

## எளிய வாழ்க்கை

நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் இல்லற வாழ்க்கையை ஊன்றிக்கவனித்தோமாயின், அது மிக்க எளியதாகவே யிருந்ததென்பது விளங்கும். மண்சுவரினால் கட்டப்பட்டு பேரீச்ச இலைகளினால்வேயப்பட்ட சிறிய அறைகளிலேயே நாயகம் (ஸல்) அவர்கள் வசித்து வந்தார்கள். அவர்களின் படுக்கை, விரிப்பும் சாதாரணமாக வே யிருந்தது. பெரும்பாலும் ஈச்ச இலையினால் செய்யப்பட்ட பாய்களிலேயே படுத்து வந்தார்கள். எம்பெருமானவர்கள் படுக்கையை விட்டு எழுந்தால் அப்பாயின் பின்னல்கள் அப்படியே தங்கள் முபாரக்கான முதுகின் பேரிலும், புஜங்களின் பேரிலும் காணப்படும். இச்சம்பவத்தைக் ஸஹாபாக்கள் பலதடவை கண்டு வருந்தி மெல்லிய மெதுவான விரிப்பைத் தயார் செய்து கொடுப்பதாக வேண்டிக் கொண்டும் நாயகம் (ஸல்) அவர்கள் அதை விரும்பவில்லை.

ஒரு சமயம் ஹஜ்ரத் உமரவர்கள் பெருமானவர்களின் வீட்டிற்குச் சென்றபோது ஒரு கட்டிலும், பேரீச்ச இலை நிறைந்த ஒரு மண் பாத்திரமும் (விரிப்பிற்கு உபயோகிக்கும்) ஒரு தோலும், தண்ணீர் வைப்பதற்காக சில தோல் கூஜாக்கள் இவைகள் மட்டும் அங்கிருப்பதைக் கண்டு கண்ணீர் சொரிந்தார்கள். "எதற்காக அழு

கிறீர்கள்" என்று பெருமானவர்கள் கேட்க ஹஜ்ரத் உமரவர்கள் "யாறசூலல்லா, நான் அழாது எப்படி யிருக்க முடியும்? கட்டிலிலுள்ள கயிறுகளால் தங்களுடைய சரீரத்தில் தடிப்புகள் பட்டிருக்கின்றனவே; தங்களுடைய வீட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் அறை என் பார்வையி லிருக்கிறது. (ரோம சக்கரவர்த்தியாகிய) கெய்ஸரும், (பாரசீக சக்கரவர்த்தியாகிய) கிஸ்ராவும் சந்தோஷத்திலும் ஆடம்பரத்திலும் மூழ்கி யிருக்கின்றார்கள். தாங்களோ ஆண்டவனின் நபியாயும், அவனால் தெரிந்தெடுக்கப் பெற்றவர்களாயும் சக்கரவர்த்திகளுக் கெல்லாம் சக்கரவர்த்தியாயு மிருக்க தங்களுடைய வீட்டுச் சாமான்களின் நிலைமையோ இப்படி யிருக்கின்றது" என்று சொன்னார்கள்.

அப்போது பெருமானவர்கள் "கத்தாபுடைய குமாரரே அவர்கள் உலகத்தைப் பெற்றுக் கொள்ளவும், நாம் ஆகிரத்தை (மறுமையை)ப் பெற்றுக் கொள்ளவும் உங்களுக்குப் பிரியமில்லையா? என்று சொன்னார்கள்.

ஆகாரத்தில்குறிப்பிட்டஓர் உணவு வேண்டுமென வைத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு முன்பு எந்த உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டதோ, அதனையே அவர்கள் திருப்தியாய்ப் புசிப்பார்கள். எது கிடைத்தாலும் அதில் பூர்ண

திருப்தி கொள்வார்கள். பலவிதமான உணவுகள் தங்கள்முன் கொண்டு வரப்பட்டால், அவற்றில் தங்களுக்கு பிரியப்பட்டதைமட்டும் புசிப்பார்கள். உணவுகள் ஆண்டவனுல் அருளப்பட்டதாத லின் அதை இகழ்வதுமில்லை, உணவுப் பொரு ளின் மீது ஆசை வைப்பின் உலக இச்சைப் பெருகு மாதலின் அதைப்பற்றிப் புகழ்வது மில்லை. தெள்ளாத வார்க் கோதுமையினுல் செய்யப்பட்ட ரொட்டியே விசேஷமாய் அவர் களது உணவாயிருந்து வந்தது. தேன், பேரீச் சம்பழம், வெள்ளரிக்காய், ஜைத்தூன் எண் ணெய், சுரக்காய், ஹல்வா முதலியவைகளையும், நெய், பால், பேரீச்சம்பழம் இவைகளைக் கொண்டு அரபி தேசத்தில் செய்யப்படும் ஓர்வித ஆகாரத்தையும் பிரியமாய் உட்கொள் வார்கள். மாமிச வகைகளில் ஆடு, ஒட்டகம், கோழி, மச்சம் முதலியவைகளையும் புசிப்பார்கள். வெள்ளைப்பூண்டு, வெங்காயம் முதலிய கடும ணமுள்ள வஸ்துக்களை வெறுப்பார்கள். எனி னும், மிகுதியான நாட்கள் பட்டினியிலேயே கடந்தன. அநேகநாட்கள் அவர்கள் வீட்டில் நெருப்பின்றியே கழிந்திருக்கின்றன.

ஒருநாள் ஒருவர் வந்து தாம் கடும்பசியா யிருப்பதாக முறையிட்டார். நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் வீட்டிலிருந்து ஆகாரம்

கொண்டு வரும்படி ஒருவரை யனுப்பினார்கள். 'தண்ணீரைத்தவிர்த்துவேறெதுவும் அங்கில்லை' என்று விடை வந்தது. மற்றொரு நாயகி வீட்டிற்கும் சொல்லி யனுப்பினார்கள். அங்கிருந்தும் அதே விடை வரப் பெற்றார்கள். என்னே இவர்களின் எளிய வாழ்க்கை!

வயிறு நிரம்பியிருப்பதைவிட பசித்து யிருப்பதையே நாயகமவர்கள்பிரியப்படுவார்கள். அவ்வாறு பசித்து யிருப்பதைப் பற்றிஎம்பெருமானார் (ஸல்) அலர்களிடம் யாராவது கேட்டால்“உலகத்தோடு எனக்கென்ன சம்பந்தம்? எனக்கு முன் வந்த தீர்க்கதரிசிகளான என் சகோதரர்கள் என்னைவிட அதிக கஷ்டங்களை சகித்து காலங் கழித்திருக்கிறார்கள்”எனவிடைப்பகர்வார்கள்.மேலும் உடையிலுங் குறிப்பானதோர் உடை அணிந்து கொள்வதென்ற வழக்கமில்லை. அஃது சாதாரணமாகவே யிருந்து வந்தது. அநேகமாக முரடான வஸ்திரங்களையே அணிந்து கொள்வார்கள். ஒன்றுக்கதிகமான ஆடைகளைவைத்துக் கொள்வதில்லை. ஆடம்பரமான உடைகளை அவர்கள் விரும்புவதில்லை. ஒட்டுப் போட்டு தைக்கப்பட்ட உடைகளையும் அவர்கள் அதிகமாக அணிந்து கொள்வார்கள். பல நிறமான உடைகளை யணிந்திருந்தாலும், வெண்மை நிறமான உடை யணிவதிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகப் பிரியமிருந்து வந்தது.

### பரிசுத்தம்

எம்பெருமானுர் நபிகள் திலகம்(ஸல்)அவர் களது அந்தரங்க ஆத்மார்த்தமானது தூய்மை யாகவும் பரிசுத்தமாகவு மிருந்தது போலவே, வெளிரங்க நடையுடை பாவனையும்மிகப்பரிசுத்த மானதாகவேயிருந்து வந்தன. ஆண்டவன் தூய் மையானவன். அவன்சுத்தத்தையும், தூய்மையை யும் விரும்புகின்ருன் என்று சொல்வார்கள். ஒரு வர் ஒருசமயம்அழுக்கடைந்தவஸ்திரங்களுடன் நம்பெருமானுர் (ஸல்)அவர்கள் திருச் சமுகத் துக்குவந்தபோழ்து, அன்னவரைநோக்கி, "உம க்குஏதேனும் பொருள் வருவாயுண்டா?" என் றுகேட்டார்கள்.அதற்கு அவர் 'ஆம்'எனவிடை யிறுத்தார். எனவே, நபிகள் திலகமவர்கள் அன்னவரை நோக்கி "ஆண்டவன், பாக்கியத் தைக் கொடுந்திருந்தால் அதை தோற்றத்தினு லும் வெளிப்படுத்த வேண்டும்" (அதாவது பரி சுத்தமான தூயஉடை யணிய வேண்டும்) என்று உபதேசித்தார்கள்.

சுகாதாரத்துக்கு பற்கள் சுத்தமா யிருக்க வேண்டியது அவசியமென்பதைக் கருதி நபி பிரான் (ஸல்) அவர்கள் "மிஸ்வாக்"கினுல் (பற் குச்சியினுல்) பல் துலக்குவார்கள். தோழர்களு க்கும் இவ்வாறே போதிப்பார்கள். வாசனைத் திரவியங்கள் மீது எம்பெருமானுரவர்கட்கு

விசேஷ உவப்பிருந்து வந்தது. எவராவது தமக்கு வாசனைப் பொருளை பரிசாக அனுப்பி வைத்தால் அதனை அன்போடு பெற்றுக் கொள் வார்கள்.

---

# பதினோராவது அத்தியாயம்

---

### நபிகள் பிரானவர்களின் குணாதிசயங்கள்

நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் தம் வாணாள் முழுதும் எவரிடத்திலும் பழி வாங்கியதே கிடையாது. தங்களைக் கொலை செய்து விடத்துணிந்த விரோதியையுங் கூட மன்னித் தருளியுள்ளார்கள்.

ஒரு சமயம் நபிகள் பெருமானாரவர்கள் ஒரு யுத்தத்தினின்று திரும்பி வருங்கால், தங்கள் வாளாயுதத்தை ஒரு மரக்கிளையில் தொங்க விட்டு வைத்து, அந்நிழலில் சயனித்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள், அது சமயம் பகைவனொருவன் நபிகள் பெருமானாரை கொல்வதற்கு இஃது நல்லதொரு சந்தர்ப்பமெனக்கருதி, அவ் வாளைத் தன் கையிலெடுத்துக் கொண்டான். அச்சமயம் எம்பெருமானாரவர்கள் (ஸல்) விழித்துக்கொண்டு, தம் பக்கத்தில் விரோதியொருவன் உருவிய வாளோடு நிற்பதைக் கண்டார்கள்.

அன்னவன் நபிகள் திலகம் (ஸல்) அவர்களை நோக்கி "முஹம்மதே! (ஸல்) இப்பொழுது உம்மை என் தாக்குதலினின்று எவர்காப்பாற்றக் கூடும்?" என்று கேட்டான். உடனே நபிகள் பெருமானாரவர்கள் எழுந்து "அல்லாஹ்! (காப்பாற்றுவான்)" என்று பதில் அளித்தார்கள். நாயகமவர்களின் திருவாயினின்று வந்த இந்த மொழியை கேட்டவுடன் அப்பகைவனின் சரீரம் நடுங்கிற்று. அவனின் கைகளும் உதறலெடுத்துக் கொண்டு வாளாயுதமானது கீழே நழுவி விழுந்து விட்டது. உடனே நபிகட் பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாளை தங்கள் கரத்திலேந்திக்கொண்டு "இப்பொழுது உன்னைக் காப்பாற்றுவது யார்?" என்று அவனை நோக்கி வினவினார்கள். அதற்கவன் உடல் நடுங்கி, நாக்குளறி "ஒருவருமில்லை" என்று பதில் மொழிந்தான். எனவே கருணைக் கடலாகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னவனை மன்னித்தருளி விட்டார்கள்.

### சகிப்புத் தன்மையும் தயாள குணமும்

ஒருமுறை எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் ஒரு யூதனிட மிருந்து சில நாணயங்களை கடன் வாங்கி யிருந்தார்கள். இன்ன தேதியில் அஃது திருப்பிக் கொடுத்து விடப்படுமென ஒரு நாளையும் குறிப்பிட்டிருந்

தார்கள். இங்ஙன மிருக்க வாக்களிக்கப்பட்ட தினத்துக்கு இன்னுஞ் சில தினம் பாக்கி யிருந்தன. இதற்குள் அந்த யூதன் நபிகள் நாயகமவர்களுடைய சமுகத்துக்கு வந்து இப்போதே கடனைத் திருப்பித் தந்துவிட வேண்டுமென விதண்டா வாதம் செய்யலாயினன். உலக தயாளர் நபிகட்டிலகம் (ஸல்) அவர்கள் மிகுந்த சகிப்புத் தன்மையைப் பூண்டு பெரிதும் இனிய மொழிகளைக் கொண்டு அந்த யூதனை நோக்கி, "ஐயா! தங்களுக்கு கூறப்பட்டிருந்த தவணை இன்னும் வரவில்லை, தற்போது பணம் கைவசமில்லை. ஆகவே பொறுத்துக் கொள்வீராக. குறித்த தவணையில் தடையில்லாது அளித்துவிடப்படும்" எனத் திருவுளமானார்கள்.

அதைக் கேட்ட அப்பொல்லாத யூதன் மென்மேலும் நபிகட் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டிக்கலானான். மேலும் கடிந்து "ஓஹோ! ஏமாற்றப் பார்க்கின்றீர்களா? உங்கள் வம்சத்தில் வாங்கின கடனை கொடுக்காது மோசஞ் செய்யும் வழக்கம் பரம்பரையாயிருந்துவருவதாக இதனால் நன்கு தெரிகின்றது" என இழிவு படுத்திக் கூறினன்.

நற்குணமற்ற யூதன் உலக தயாளர் சத்திய சீலர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது இங்ஙனம் அபவாதங் கூறியதைக் கேட்ட ஹஜ்ரத்

உமர் (ரலி) அவர்கள் எழுந்து மிகக் கோபா வேசம் பூண்டவராகி விட்டார்கள். யூதனின் மீது மிகுந்த ஆத்திரத்தோடு அன்னவனை நோக்கி "ஓய்! இப்போது நீர் கூறியது போன்ற தகாத வார்த்தைகளை எம்பெருமானாரவர்கள் விஷயத்தில் இத்திருச் சபையல்லாத வேறிடத்தில் சொல்லியிருப்பீராயின் நிச்சயமாக உன் சிரசை உடலை விட்டும் வேருக்கியேயிருப்பேன். நபிகள் நாயகத்தின் சபையில் கூறியதினுல் தப்பித்தாய்" என்று அதட்டினுர்கள்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்யூதன் விஷயத்தில் இங்ஙனம் கடுமொழி கூறியதைக் கேட்ட எம்பெருமானுர் லோகதயாளர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் உமர்கத்தாப் அவர்களை நோக்கி "உமர்! எனக்காக தாங்கள் நியாயம் வழங்குவதாயின் அவரது கடனைத் தீர்த்து விடுமாறு எனக்கு கூறியிருத்தல் வேண்டும். அந்த யூதரை இனிய மொழிகளால் சாந்தப்படுத்தி சமாதானங் கூறியிருத்தல் வேண்டும். இதை விடுத்து கடன் கொடுத்தவரை அதட்டுவதும், கடிந்து கண்டிப்பதும் நல்லதல்ல. தாங்கள் எனது நன்மையைக் கோருவீர்களாயின் எனது இக்கடனை தாங்கள் தீர்த்து விடுங்கள். மேலும் அந்த யூதரை திருப்திபடுத்துவான் வேண்டி சொற்பத்தொகையை அதிகமாகவும் கொடுங்கள்.

அவரது மனதை வருத்தப்படுத்துவது சரியன்று'' என இதமான நல்லுரைப்புகன்றூர்கள்.

எம்பெருமானர் (ஸல்) அவர்கள் கட்டளைப்படி ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் நடந்து கொள்ளலாயினர். யூதருக்குக் கொடுக்க வேண்டியிருந்த கடனை திருப்திகரமாக அளித்து விட்டனர். அந்த யூதன் தான் நடந்து கொண்ட நியாயமற்ற முறையையும், அதற்கு எம்பெருமானர் திருத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய சகிப்புத் தன்மையையும், நடந்து கொண்ட தத்துவத்தையும் அவர்களின் சாந்தத்தையும் உணர்ந்து கொண்டான். எம்பெருமானர் (ஸல்) மீது நல்லெண்ணங் கொண்டான். உடனே எம்பெருமானர் லோக நாதர் ரஸூல் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்திலே மனமு வந்து இஸ்லாம் மதத்தை தழுவி முஸ்லிமாகிவிட்டார்.

### ஜீவனோபாய உபதேசம்

ஒரு முறை திடதேகியான அராபிய வாலிபரொருவர் ஆண்டவனின் தூதர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்துக்கு வந்து தமக்கு உதவி புரிய வேண்டுமென்று யாஸகம் கேட்கலானர். எனவே லோக தயாளர் உலகை சீர்திருத்தகர் ரஸூல் (ஸல்) அவர்கள் அந்த வாலிபரை நோக்கி அவர் வீட்டில் ஏதேனும் வஸ்துக்கள் உண்டா? என வினவினர்கள்.

அதற்கு அந்த வாலிபர் 'நாயகமே! எனது வீட்டில் ஒட்டகத்தின் தோல் ஒன்றுள்ளது. அதுதான் எங்களுக்கு மேற்போர்வையும், கீழ் விரிப்புமாகும். இஃதல்லாமல் ஒரு பாத்திர முண்டு. அப்பாத்திரத்திற்றுன் தண்ணீர் குடிக்கின்ருேம். இந்த இரண்டு வஸ்துக்கள் மட்டுமே தான் எங்கள் வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களாகும்'' என்று விடையிறுத்தார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த வாலிபரை நோக்கி "சரி அப்படியாயின் அவ்விரண்டு வஸ்துக்களையும், என் சமூகத்துக்குக்கொண்டு வருவீராக''எனக்கட்டளையிட்டனர். அவ்வாறே அம்மனிதர் தமது இல்லத்துக்குச்சென்று சிறிது நேரத்திற்குள் அவ்விரண்டு வஸ்துக்களையும் கொண்டுவந்து எம்பெருமானுர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தனர்.

மேலும் நபி பெருமானவர்கள் அவ்விரு வஸ்துக்களையும்தம்கரத்தில்எடுத்துக்கொண்டு தங்கள் திருச்சமூகத்தில் விஜயஞ்செய்திருந்த இதர சஹாபாக்களை நோக்கி 'அன்பர்காள்! உங்களில் எவரேனும் இவ்வஸ்துக்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா?' எனக் கேட்டனர். சஹாபாக்களில் ஒருவர் எழுந்து நாயகமே! இவ்விரு வஸ்துக்களையும் யான் ஒரு திர்ஹமுக்கு (வெள்ளி

நாணயத்துக்கு) தான் வாங்க முடியும்' எனப் பதில் கூறினர்.

மீண்டும்நாயகமவர்கள்சஹாபாக்களை நோக்கி "இதைவிட சற்று அதிகமான விலைக்கு உங்களில் எவரேனும் இவ்வஸ்துக்களை வாங்கிக் கொள்வீர்களா ?" என்று கேட்டார்கள். எனவே மற்றொரு சஹாபி முன்வந்து, "நாயகமே ! நான் இவற்றை இரண்டு திர்ஹம்களுக்கு வாங்கிக் கொள்கிறேன்" என்று விடையிறுத்தார்.

அவ்வாறே எம்பெருமானர் (ஸல்) அவர்கள் அவ்விரு பொருட்களையும் பின்னைய சஹாபிக்கு இரண்டு திர்ஹம்கட்கு விற்றுவிட்டார்கள். அதற்குரிய இரண்டு திர்ஹம் (நாணயம்)களை வாங்கி அந்த மனிதரிடம் கொடுத்து "ஒரு திர்ஹமுக்கு தானியம் வாங்கி உணவு சமைத்து தன்னுடையவும் தன் மனைவி மக்களுடையவும் ஜீவனும்சம்புரிந்து கொள்ளும்படியும், இரண்டாவது திர்ஹமுக்கு கடைவீதியினின்று கோடாரியொன்றை வாங்கிக் கொண்டு வரும்படியும் சொல்லி யனுப்பினர்கள்.

அவ்வாறே, அம்மனிதரும் எம்பெருமானர் அளித்த இரண்டு திர்ஹம்களைப் பெற்றுச் சென்று ஒன்றுக்கு உணவுக்குரிய தானியமும், மற்றொன்றுக்கு கோடாரியொன்றும் வாங்கினர். தானியத்தை வீட்டில் கொடுத்துவிட்டு கோடாரி

யை எம்பெருமானர் (ஸல்) அவர்கள் சமூகத் துக்குக் கொண்டு வந்தார். நபிகள் நாயகம் ரஸூல்(ஸல்)அவர்கள் அக்கோடாரியை தங்கள் கரத்தில் வாங்கி அதைமீண்டும் தங்கள் கரத்தினின்றும் அந்தவாலிப மனிதரிடமே அளித்து “அன்ப! இதை நீவிர் காட்டுக்குக் கொண்டு சென்று காட்டுமர விறகுகளை வெட்டிக் கொண்டு வந்து, கடைவீதியில் விற்று வருவீராக. இங்ஙனம் 15-வது நாள் இறுதியில் நீவிர் என்னிடம் வந்து எத்துணைப் பணம் சம்பாத்தியம் புரிந்தீர் என்பதை எனக்குத் தெரியப்படுத்தக் கடவீராக” என்று கட்டளையிட்டனுப்பினர்கள்.

அம்மனிதர் அவ்வாறே விடை பெற்றுச் சென்று விட்டார். 15 நாட்கள் கடந்தன. மீண்டும் அம்மனிதர் நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் திருச் சமூகத்துக்கு விஜயம் செய்து மிக சந்தோஷித்தவராகவும், களிப்புப் பொருந்தியவராகவும் திரு நபியவர்களை நோக்கி “நாயகமே! 15 நாட்களாக யான் 10 திர்ஹம் (வெள்ளி நாணயம்) களை சம்பாத்தியம் புரிந்தேன்; சிலவற்றை கொண்டு வீட்டிற்காகவென்று தானிய உணவுப் பொருட்களை வாங்கினேன். இன்னுஞ் சில திர்ஹங்களை கொண்டு உடுக்கத் துணிகள் வாங்கினேன். எனவே இதுபோழ்து யான் சந்தோஷ சித்தனய் காலங்கடத்தி வரு

கின்றேன். வேறெவரிடமும் கையேந்தி கெஞ்ச வேண்டியதில்லாமல் சுயாதீன முடையவனுகவே யிருக்கின்றேன்" என்று கூறினர்.

இதைச் செவியுற்ற நாயகம் (ஸல்) அவர்கள் அகமகிழ்ந்து கூறியதாவது:—"தங்களது இச்சுக நிலையை யுணர்ந்து யானும் சந்தோஷப் படுகிறேன். பிரயாசைப்படுவோருக்கு தக்க பிரதி பலனை ஆண்டவன் நிச்சயம் தருகின்ருன்என்பதையும், சோம்பற்கொண்டு பிறரிடம் கையேந்தி கெஞ்சுபவனிடம் ஆண்டவன் அதிருப்திக் கொள்ளுகிருனென்பதையும் நன்ருக ஞாபகத்தில் வைத்துக்கொள்வீராக" எனக் கூறினார்கள்.

---

# பதினோராவது அத்தியாயம்

## செய்நன்றி அறிதல்

ஒருமுறைஅரப்தேசத்து 'அவ்தாவ்ஸ்' என்னும் மைதானத்தில் முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அது சமயம் சில போர்வீரர்கள் (முஜாஹிதுகள்) ஒரு ஸ்திரீயை சிறைபடுத்தி தங்கள் கூடாரத்தை நோக்கி இழுத்துக் கொண்டு வந்தார்கள். அதுகாலை அம்மாது மிகவும் மனம் நொந்து அந்த முஜாஹிதுகளை நோக்கி "இஸ்லாத்தின் வீரர்களே! என்னை கண்ணியப்படுத்தி உபசரிப்பது உங்கள்

கடமையல்லவா? நான் உங்கள் நாயகமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களுடைய சுற்றத்தினள் அல்லவா?" என்று கதறிக்கூவிப்பிரலாபித்தனர். அம்மாது தான் தப்பிப்போவதற்கு இவ் வித வார்த்தைகளை கூறுகின்றனர் என்று அந்த முஜாஹிதுகள் எண்ணிக்கொண்டு'ஏபெண்ணே! உனக்கு இத்துணை திமிரா? எங்கள் மாண்புமிக்க எம்பெருமானாரவர்களுடனுஉன் நஸபை,(வம்சத் தை)சம்பந்தப்படுத்துகிறாய்? என்றுகடிந்துகூறி னர். அதற்கு அம்மாது, "ஆம்! யான் கூறுவ தனைத்தும் சத்தியமாகும். நான் இவ்வுண்மை யை ருஜூப்பிக்கவும் தயாராயிருக்கிறேன்" என்று பதில் கூறினள். எனவே முஜாஹிதுகள் அம் மங்கையை நோக்கி "நீ கூறுவது அங்ஙனம் உண்மையாயின், நாங்கள் உன்னை எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் திருச் சமூகத்துக்கு அழைத்துச் செல்கிறோம். அங்கு வந்து நீ உன் விவாதத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறி அப்பெண்மணியை ஆண்டவனின் திருத்தூதர் நபிகள் நாயகமவர்கள் சமூகத்தில் அழைத்துக்கொண்டு வந்து விட்டார்கள். மேலும் கூறலானார்கள்:—

"எங்கள் நாயகமே! இந்தப் பெண்மணியை யாங்கள்யுத்தமைதானத்தில்கைதுசெய்துகொண்டுவருகிறோம். இப்பெண் நமது விரோதிகளின்

படையில் சேர்ந்து கொண்டு எங்களை எதிர்த்து யுத்தஞ் செய்தனள். இந்த மாது மேன்மை தங்கிய தங்களுடைய உறவின் முறையென்று கூறுகின்றனள். இப்பெண்பாலின் வார்த்தையின் மீது எங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எனவே தங்கள் திருச் சமூகத்துக்கு அழைத்து வந்துள்ளோம். விசாரியுங்கள்' என்று கூறி முடித்தனர்.

பிறகு, ஞான சற்குரு நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்களுக்கும், வீரர்களால் கொண்டு வரப்பட்ட பெண்மணிக்கும் கீழ்க்காணுமாறு சம்பாஷணை நடந்தது.

நபிகள் நாயகம்:—நீவிர் யார்? உமது பெயரென்ன?

பெண்மணி:—"ஆண்டவனின் திருத் தூதரே! நான் தங்கள் பால் குடிப்பின் உறவுள்ள சகோதரியாவேன். எனது பெயர் 'ஷீமா' என்பதாகும். யான் 'ஹலீமா' அம்மாவின் புதல்வியாவேன். 'பனீஸஅத்'வம்சத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஹலீமாவே எனது அன்னையாவர். அந்த அன்னையிடம் தான் தாங்களும் பால் குடித்திருக்கிறீர்கள்."

நபிகள் நாயகம்:—ஆம்! யான் ஹலீமா அன்னையிடம் பால் குடித்து வளர்ந்தது எனக்கு

நன்கு ஞாபக மிருக்கின்றது. மேலும் பால்குடி உறவின் முறையான சகோதரி யொருவள் 'ஷீமா' என்றபெயருடனிருந்ததும்என் ஞாபகத் திலிருக்கிறது. அச்சம்பவம் நிகழ்ந்து வெகு காலம் சென்று விட்டதால் தோற்றத்தைக் கொண்டு தெரிந்து கொள்வது சிரம சாத்தியமா யிருக்கிறது.

ஷீமா:—ஆம், தாங்கள் கூறுவது முழுதும் உண்மையே யாகும். மேலும் யான் தங்களை நல்லவிதமாகத் தெரிந்துகொண்டு விட்டேன்.

நபிகள் நாயகம்:—ஷீமா! நீதான் ஹலீமா வின் மகள் என்று யான் எவ்விதம் நிச்சயங் கொள்வது? ஏதேனும் அத்தாக்ஷிக் காட்டு வாயா?

ஷீமா:—அப்படியேஆகட்டும்; ஷீமாவாகிய யான் அக்காலை தாங்கள் அன்போடு தோள்மீது தூக்கி வைத்துக் கொண்டு உலாவி உறவு பூண் டிருந்தது தங்களுக்கு ஞாபக மிருக்கலாம்.

நபிகள் நாயகம்:—உண்மையே! இது எனக்கு நன்கு ஞாபகத்திலிருக்கிறது.

ஷீமா:—நாயகமே! இன்னமும் அக்காலை தாங்கள் சிறு பாலகனா யிருக்கும்போது ஒரு தினம் கோபங் கொண்டு பால்குடி உறவின் சகோ தரியாகிய என் புஜத்தைக் கடித்து விட்டீர்களல் லவா?

நபிகள் நாயகம்:—ஆம்! இச்சம்பவமும் ஞாபகத்திலிருக்கிறது.

நற்பாக்கியவதியான ஷீமா தனது புஜத்தின் மீதிருந்த வஸ்திரத்தை ஒதுக்கி "நாயகமே இஃதோ இவ்வடையாளத்தைக் கண்ணுறுங்கள்! இதுதான் தங்கள் புனித பற்களால் கடியுண்ட காயத்தின் அடையாளமாகும்" என்று கூறினள்.

ஷீமாவின் புஜத்தின் மீது தங்கள் பற்களின் அடையாளத்தைக் கண்ட நபிகள் நாயகமவர்களுக்கு ஆனந்த பாஷ்பம் சொரிந்தது. மேலும் நாயகமவர்கள் ஷீமாவை நோக்கி, "சோதரி! நிச்சயம் நீதான் ஷீமா, உனது தாய் ஹலீமா அன்னையவரிடம்தான் யானும் பால் குடித்துள்ளேன். யான் உனது தாயின் குடிசையிலும், அதைச் சூழ்ந்தவனத்திலும், வெளியிடங்களிலும் யான் உன்னுடன்வளர்ந்துஎன் பால்ய பிராயத்தைக் கழித்துள்ளேன். நீ அக்காலை என்னை அன்பு வாஞ்சையுடன் மடிமீதிருத்தி விசுவாசித்து கொஞ்சிவளர்த்தனையன்றே? ஆகவே! நீஇன்று என்னருகேவா!எனது இம்மேலுடையின் முந்தானையின்மீது சமத்துவமாக உட்கார். இதுபோழ்து உனக்கு எம்ஜனங்களால்நேர்ந்த கஷ்டங்களுக்காக யான் பெரிதும் வருந்துகிறேன். இனி எனதுவீட்டை உனதுவீடுபோல்

பாவித்துக்கொள். சுகமாகவும் நிம்மதியாகவும் இங்குவாழ்ந்திரு. என்னுல் கூடுமான உதவிகளைப் புரிய யான் சித்தமாயுள்ளேன்'' என்று அன்பு மிகுந்து இனிய மொழிகள் கூறிதேற்றினர்.

நபிகள் நாயகமவர்கள் அன்புக் கிணங்க ஷீமாவும், நாயகத்தின் மேலுடையின்மீது ஒருபகுதியில் உட்கார்ந்தனர். சிறிது நேரத்திற்குப் பின் ஷீமா நாயகத்தை நோக்கி "நாயகமே! தங்கள் அன்புக்கும், பேருபசரணைக்கும் யான் என்றென்றும் நன்றியறித லுள்ளவளாயுள்ளேன். யான் இங்கிருந்து சென்று எனது குல ஜனங்களுடன் சேர்ந்து வனத்தில்வசிக்கவே விரும்புகின்றேன். தாங்கள் அனுமதியளியுங்கள்'' என்று கோரிக் கொண்டனர். எனவே நாயகமவர்களும் அக்கோரிக்கையை அங்கீகரித்து 'ஷீமா! நீஉன்இஷ்டப்படி செய்யலாம்' என்று அனுமதியளித்தனர். பால்ய காலத்தில் அப்பெண்மணியால் தமக்கு உண்டான உபகாரத்திற்கு நன்றியறிதலாக அநேக சன்மானங்களைக் கொடுத்து இப்பெண்மணியை கண்ணியத்தோடும் பாதுகாப்போடும் அழைத்துச் சென்று அவரது வீடுவரை கொண்டுபோய் சேர்த்து விடுங்களெனத் தம் சகாக்களுடன் அனுப்பி வைத்தார்கள்.

முஷ்ரிக் காபிர்களால் எம்பெருமானுர் மீது பற்பல கொடுமைகள் புரியப்பட்டபோது ஒரு

தோழர் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து நாயகமே ; அந்தப் பொல்லாத காபிர்கள் மீது சாபம் (பத்துஆ) புரியுங்கள். என்று கூறினார். உலக தயாளரான நபிகள் நாதரவர்கள் அத்தோழரை நோக்கி, “யான் தயாளத்தை (ரஹ்மத்தை) முன்னிட்டு அனுப்பப்பட்டுள்ளேன், சபிப்பதற்கும், கொடுமைப் புரிவதற்கும் அனுப்பப்படவில்லை. எல்லாம் வல்ல இறைவன் அக்‘குப்பார்’களுக்கு நேர்வழியை துலக்குவானாக!” என்று மிக தயையோடு பதில் கூறினார்கள். என்னே கருணை! எத்துணை பரிசுத்த மனம்!! என்னே தூயவாழ்க்கை!! எத்துணை சகிப்புத்தன்மை!!! இத்தகையவள்ளல் நபிகள் நாயகத்தின் அரும்பெரும் திவ்விய தயாள குணத்தை இதுகாலை உம்மத்துகளாகிய நாம் மறந்து கிடக்கின்றோம். அவற்றினைப் பின்பற்றி நடக்கும் பாக்கியத்தை ஆண்டவன் நம் அனைவருக்கும் அருள் பாலிப்பானாக!

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்

---

### நடை ஒழுக்கம்

மதீனா முனவ்வராவில் ‘மஸ்ஜிதெநபவி’ யை புதிதாகக்கட்டிய தருணம் ஸஹாபாக்கள் ஒவ்வொருவரும் அவ்வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

நாயகம் (ஸல்) அவர்களை ஸஹாபாக்கள் எவ்வள வோ தூரம்சும்மாயிருக்கும்படி க்கேட்டும் எம்பெரு மானவர்கள் அவ்வேலையில் கடைசிவரை கலந்து கொண்டார்கள். மதீனாவைத் தாக்கவந்த பகைவர் கள் மதீனாவுக்குட்பிரவேசிக்காதபடி தடுப்பதற்காக ஸஹாபாக்கள் அகிழ்க்கிடங்கு வெட்ட நேரிட்ட போதும் எம்பிரான் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்க ளுடன் சேர்ந்து அகிழ் வெட்டு மண்ணும்சுமந் திருக்கிறார்கள். நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் எந் தத்தொழில் செய்வதையும் கேவலமாகக்கருதுவ தில்லை. மனிதனுடைய உயர்வும் தாழ்வும் அவ னுடைய தொழிலைப் பொருத்ததாகயில்லையென் றும், அவனுடைய நடை ஒழுக்கத்தையும் சத்தி யத்தையும் பொருத்தே யிருக்கிறதென்றும் பெரு மானார் (ஸல்) அவர்கள் நடை முறையில் செய் துகாட்டியிருக்கிறார்கள். இதரர்களுக்கு உபகார வேலை செய்வதிலும் எம்பெருமானார் அவர்கள் மிக சிறந்து விளங்கினார்கள்.

கப்பாக் இப்னு, அரக் என்ற ஸஹாபி யுத்தத் திற்காக மதீனாவை விட்டு வெளியூர் சென்றிருந் தனர். அவரின் மனைவியும் பிள்ளையும் ஓர் ஆட்டின் பாலைக்கொண்டே ஜீவனஞ் செய்ய வேண்டியிருந்தது. பால் கறக்க ஆள் இல்லா மையால் எம்பெருமானவர்கள் உத்தரவுப்படி அவ்வம்மையார், அவ்வாட்டை தன் பையன்

வசம் காலையிலும் மாலையிலும் நபிகள் நாயக மவர்கள் சமூகத்துக்கு அனுப்பி வைத்தார். எம்பெருமான் (ஸல்) அவர்கள் தங்கள் திருக் கரத்தால் ஆட்டின் பாலை கறந்து கொடுத்து வந்தார்கள்.

தங்களிடம் உதவியை வேண்டிக்கொள்பவர் கள் அடிமையாயிருந்தாலும் ஏழையாயிருந்தா லும் அவர்களுக்கு உடனே உதவி செய்வார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் தொழுவதற்காக நின்று கொண்டிருந்த சமயம் ஓர் காட்டரபி வந்து அவர்களின் தூயபோர்வை யைப் பிடித்திழுத்து, 'என் வேலை பாக்கியா யிருக்கிறது. அதை நீங்கள் வந்து செய்து தரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். எம்பெருமானாரவர்கள் அவனுடன் சென்று அவனுடைய வேலையை முடித்துக் கொடுத்து விட்டு வந்தார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்களின் குண ஒழுக்கமும் நடப்பும் 'குர்ஆன்' ஷரீபுக்கு ஏற்றவாறாக இருந்தன வென்று ஆயிஷா நாயகியவர்கள் கூறியிருக்கி றார்கள். மனித வாழ்க்கையில் ஒழுங்குபடுத்தி உயர் நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக குர் ஆனில் கூறியிருக்கும் போதனைகளை நபிகட் பெருமானாரவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கை யில் அனுஷ்டித்துக் காட்டி யிருக்கின்றார்கள்.

எவரும் அடையாத உன்னதப் பதவியை எம்பெருமானாரவர்கள் அடைந்திருந்தும்மற்றவர்களை விட தங்களை மேலாகக் கருதுவதே கிடையாது. மக்காவிலிருக்கும்போது எத்தகைய ஆடம்பரமற்ற சாதாரணவாழ்க்கையை அவர்கள் அனுஷ்டித்துவந்தார்களோ அவ்வித வாழ்க்கையைத் தான் அவர்கள் அரசுரிமைப்பெற்று விளங்கியகாலத்திலும் அனுஷ்டித்து வந்தார்கள்.

தங்களின் வேலைகளை தாங்களே செய்து கொள்வார்கள். எந்த வேலையையும் அவர்கள் கேவலமாக கருதுவதில்லை. கடை வீதிக்கு அவர்களே சென்று சாமான் வாங்கி வருவார்கள். அவர்கள் வாங்கும் சாமான்களை அவர்களே சுமந்து வருவார்கள். மற்றவர் தூக்கி வர உதவி செய்வதாய் சொன்னாலும் எற்றுக்கொள்ள மாட்டார்கள். தங்கள் வீட்டு வேலைகளுக்காக மற்றவர்களை தொந்தரவு கொடுக்க மாட்டார்கள். வீட்டிலுள்ள ஆட்டின் பாலை அவர்களே கறப்பார்கள். ஒட்டகத்தைக் கட்டி அதற்கு புல் முதலியவை போட்டு அவர்களே கவனித்துக் கொள்வார்கள். வீட்டை அவர்களே பெருக்கி சுத்தம் செய்வார்கள். இதைக்கேவலமாக எண்ண மாட்டார்கள். கிழிந்த ஆடைகளைத் தாமே தைத்துக்கொள்வார்கள், தம் பாதரக்ஷையை அவர்களே செப்பனிட்டுக் கொள்வார்கள்.

# பதின்மூன்றாவது அத்தியாயம்

## நீதி

எம்பெருமான் (ஸல்) அவர்கள் மிகுந்த அன்பும் இரக்கமுள்ளவர்களா யிருந்தும் நீதி வழங்குவதில் சிறிதும் பாரபக்ஷமில்லா திருந்தார்கள். பெருமானவர்கள் மக்காவி லிருக்கும் பொழுது ஜனங்கள் தங்களுடைய வழக்குகளை அவர்களிடமே தீர்த்துக் கொள்வார்கள். மதீனா வந்ததின்பின் யூதர்களும், விக்கிரக வணக்கத்தாரும் தங்களுடைய வியவிகாரங்களை நபிபிரான் அவர்களிடமே முடிவு செய்து கொள்வார்கள். யூதர்களுக்கு பெருமான் அவர்களிடமும், இஸ்லாத்தின் மீதும் அளவு கடந்த வெறுப்பிருந்துங்கூட அவர்களின் நீதியில் யூதர்களுக்கு சந்தேகமில்லா திருந்தது. பெருமானவர்கள் ஞாயம் வழங்குவதில் முஸ்லிமென்றோ யூதனென்றோ யாதொரு வித்தியாசமும் பாராட்டுவதில்லை.

மக்கா ஜெயத்திற்குப் பின் பெருமானவர்கள் 20 நாள் வரை தாயிபை முற்றுகை செய்து அதை ஜெயிக்காமல் திரும்பி விட்டார்கள். அப்பொழுது "ஸகர்" என்னும் பெயருள்ள அரபியத் தலைவரொருவர் சேனையைத் திரட்டிக் கொண்டு தாயிபை பலமாக முற்றுகை செய்தார். அவருடைய முயற்சியினால் தாயிப் வாசிகள்

சரணமடைந்து நபிபிரான் அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதாக சம்மதித்தார்கள். "ஸகர்" இவ்விஷயத்தை பெருமானவர்களிடம் அறிவித்தார். அச்சமயம் "தகீப்" வாசி யொருவரும் பனூஸலீம் கூட்டத்தாரும் பெருமான் அவர்களிடம் வந்து ஸகரின் மீது இரண்டு குற்றத்தைச் சுமத்தினார்கள். "ஸகர்" என்னும் தலைவர் தாயிப் விஷயத்தில் பெருமான் அவர்களுக்கு மேற்கண்டவாறு மிகுந்த உதவி செய்திருந்தும் ஞாயத்தை உத்தேசித்து இரண்டு விஷயத்திலும் அவருக்கு விரோதமாகவே தீர்ப்பளித்தார்கள்.

"கைபர்" யூதர்களிடம் மாகூல் வசூல்செய்ய வேண்டியதற்காக அப்துல்லா ஹிப்னு ஸஹல் என்பவர் கைபருக்குச் சென்றிருந்தார். அவருடன் அவரின் சிறிய பிதாவின் குமாரர் "மஹீசத்து" என்பவருமிருந்தார் ஒருநாள் தெருவழியாய் அப்துல்லாஹ் போய்க்கொண்டிருக்கையில் ஒருவன் அவரை வெட்டி ஒரு குழிக்குள்ளே போட்டுவிட்டான். 'மஹீசத்து' என்பவர் பெருமான் அவர்களிடம் வந்து அப்துல்லாஹ்வை யூதர்கள் கொன்று விட்டதாக முறையிட்டார். அப்பொழுது பெருமானவர்கள் அவரை நோக்கி யூதர்கள் தான் அவரைக் கொன்றார்களென்று நீர் சத்தியஞ் செய்யக்

கூடுமா? என்றுகேட்க அவர் வெட்டப்பட்டதை என் கண்ணினால் பார்க்கவில்லை என்று பதில் சொன்னார். அப்படியானால் யூதர்களை சத்தியம் செய்யச் சொல்லலாமா! என்று நாயகம் வினவினார்கள். யூதர்களுடைய சத்தியத்தை நம்ப முடியாது என்று விடைபகர்ந்தார். கைபரில் யூதர்களைத் தவிர வேறு எக்கூட்டத்தாருமில்லாதிருந்தும், யூதர்களே அப்துல்லாஹ்வைக் கொன்றிருக்கலாமென தெரிந்திருந்தும் நேரான சாக்ஷியமில்லாததால் யூதர்களின் மீது குற்றத்தை சுமத்தாமல் கொல்லப்பட்டவரின் குடும்பத்தாருக்கு (பைத்துல்மால்) பொது நிதியிலிருந்து 100 ஒட்டகங்களை நஷ்டஈடாக பெருமானவர்கள் கொடுத்தார்கள்.

இரு லோக நாயகம் நபிகள் திலகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய அருமந்தப்புதல்வியான பாதிமா நாயகி (ரலி) அவர்கள் தம் வீட்டில் தாங்கள் தம் கரத்தாலேயே சகல வேலைகளையும் செய்வார்கள். நீர் நிலையினின்று தண்ணீர் கொண்டு வருவார்கள். இயந்திரத்தில்மாவரைப்பார்கள். தரையை பெருக்கிக் கூட்டி சுத்தப்படுத்துவார்கள். இங்ஙனமிருக்க ஒருநாள் பல வேலைக்காரர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்திற்கு வந்து தங்களை வேலைக்

காக வைத்துக் கொள்ளுமாறு கோரிக்கொண்டார்கள்.

இவ்விஷயத்தைத் தெரிந்த ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் (பாத்திமா நாயகியின் கணவர்) தமது தர்மப் பத்தினியை நோக்கி 'நீவிர் எல்லா வேலைகளையும் செய்து சிரமப்படுகின்றீரே! உமது தந்தையவர்களிடம் சென்று ஒரு வேலைக்காரியை அமர்த்தித் தரும்படி கேட்பீராக, எனக் கூறினுர்கள். எனவே, பாதிமா நாயகியவர்கள் நபிகள் திலகமவர்களிடம் வந்தார்கள். அது சமயம் எம்பெருமானுர் (ஸல்) அவர்கள் திருச்சமூகத்தில் பல ஜனங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஆதலால் கேட்பதற்கு இது சமயமல்லவென்று திரும்பி வீட்டுக்குச் சென்றுவிட்டனர். (இஃது கோஷாவுடைய கட்டளை பிறப்பிக்கப் படுவதற்கு முன்பு.)

இரண்டாவது நாள் எம்பெருமானுர் நபிகள் நாயகமவர்களே தமது புதல்வி பாதிமா நாயகியின் இல்லத்துக்குச் சென்றுர்கள். மேலும் புதல்வியை நோக்கி, "புத்திரி! நேற்று என் இருப்பிடத்துக்கு வந்திருந்தனையே! யாது காரணம்பற்றி? என்று வினவினுர்கள். பாதிமா நாயகி தம் தந்தையிடம் பதில் கூற மனமெழாமல் மௌனமாயிருந்து விட்டனர். ஆனுல் ஹஜ்றத் அலீ (ரலி) யவர்கள்

முன் வந்து நபிகள் பிரானை நோக்கி ‘நாயகமே தங்கள் இந்த புதல்விதாமே இயந்திரத்தில்மாவ ரைக்கின்றார். இதனால் இவர்களின் கரங்களில் காப்புக் காய்த்து விட்டது. இன்னமும் தானே நீர் நிலையினின்று தண்ணீர்ப் பைகளை சுமந்து வருகிறார். இதனால் தோள், நெஞ்சுகளின் மீது தழும்புண்டாய் விட்டது. இன்னமும் தானே வீடு வாசலை யெல்லாம் கூட்டிப் பெருக்கின்றார். இதனால் உடைகளெல்லாம் தூசு படிந்து அழுக்காய் விடுகிறது. தங்சள் சமூகத்து பல ஊழியக்காரர்கள் வந்திருந்தார்களே! அதைத் தெரிந்து யான் தான் தங்கள் புதல்வியை தங் கள் சமூகத்துக்கு அனுப்பி ஒரு வேலைக்காரி யைக் கேட்டு அழைத்து வருமாறு அனுப்பி னேன்: இவர்கள் படும் கஷ்டம் இதனால் சற் றுக் குறையுமென்று நம்பி அவ்வாறு செய் தேன்.’’ என்று சிபாரிஷாகக் கூறினார்கள்.

லோக தயாளர் நபிகள் நாயகமவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு யாதொரு பதிலையும் கூறு மல் இருந்து விட்டனர். ஆனால் தமது அரும் புதல்வியார் பாதிமா நாயகியை நோக்கி “பெண் களுக்கு நாயகியாகிய பாதிமா! நீ ஆண்டவ னுக்கு அஞ்சிக் கொள்வாயாக! அவ் வாண்ட கையின் கட்டளைகட்கு உட்பட்டு நடப்பாயாக! உன்வீட்டுவேலைகளை நீயே செய்துகொள்வாயாக!

சோம்பல் கொள்ளாதிருப்பாயாக! இரவானதும் நீயுன் படுக்கைக்குச் செல்லுங்கால் தூங்குவதற்கு முன் 33 தரம் "ஸுப்ஹானல்லாஹ்!" என்றும், 33 தரம் "அல்ஹம்துலில்லாஹ்?" என்றும், 33 தரம் "அல்லாஹு அக்பர்" என்றும் ஓதிக் கொள்வாயாக. இந்த தஸ்பீஹானது வேலைக்காரியின் சகாயத்தைவிட உனக்கு அபரிமிதமான நன்மையானதாகும்" என்று திருவாய் மலர்ந்துபதேசித்தார்கள்.

இதற்கு முன்னுங்கூட பாதிமா நாயகமவர்கள் இவ்விதக் கட்டளைகளை மனமுவந்து நடந்து வந்தார்கள். இப்போது நபிகள் பிரானவர்கள் போதித்த நீதிகளையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். மேலும் "யான் அல்லாஹுவுடையவும், அவனது திருத்தூதருடையவும் கட்டளைகளை மனமுவந்து ஏற்று நடக்க சித்தமாக யிருக்கிறேன்" என்று கூறினார்கள் என்னே எம்பெருமானாரின் பெருந் தன்மையும் பாதிமா நாயகியின் பொறுமைக் குணமும்!!

எம்பெருமானார் நபிகள் நாயகமவர்கள் தம் புதல்விக்கு வேலைக்காரியை அமர்த்தித் தருவதற்கு பதிலாய் தஸ்பீஹாகிய கலீமா ஓதுவதை கற்றுக் கொடுத்ததில் ஆழ்ந்த தத்துவ மிருக்கிறது. அதாவது, ஆண்டவனை சதா தியானித்துக் கொண்டிருத்தல் வேண்டும். உள்ளத்தை

கொண்டே போதுமென்ற திருப்தியான மனம் கொள்ளல் வேண்டும். வீண் பேராசைகள் கொள்ளலாகாது என்பது போன்ற நன்னடத்தையில் ஒரு பெண்மணி யிருந்து வருங்காலமெல்லாம் அப்பெண்பால் பாப காரியங்களினின்று பரிசுத்தமா யிருப்பது இயலுமானதாகும். வீணசையை யொட்டி பிறரிடம் வேலை வாங்கி சோம்பலான சுகம்பெற மாட்டார்கள். இதை யுத்தேசித்தே எம்பெருமானு ரவர்கள் தமது புதல்விக்கு மேற்கூறிய பிரகாரம் உபதேசம் புரிந்தார்கள். இருலோக நாதர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருமை செல்வப் புதல்வியின் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பதே இக்காலத்து செல்வந்தர் வீட்டுப் பெண்களுக்கு சாலச் சிறந்ததாகும் என்பதைக்கவனிப்பார்களாக!

பெருமானவர்கள் கடைசி நேரத்திலும் நீதி வழங்குவதை மறக்கவில்லை. முஸ்லிம்களுக்கு இறுதியாகப் பிரசங்கம் செய்தபொழுது அவர்களை நோக்கி "நான் எவருக்காவது தீங்கிழைத்திருந்தால் அதற்கு ஈடு செய்ய இப்பொழுது தயாராயிருக்கின்றேன். நான் யாருக்காவதுகடன் பட்டிருந்தால் என்னிடத்தி லுள்ளவைகளைக் கொண்டு அதைத் தீர்ப்பதற்கு ஆயத்தமாகயிருக்கின்றேன்." என்று கூறினர்கள். அப்போது மூன்று திரஹம் தமக்குக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறதென்று ஒருவர் சொல்ல உடனே அதைக் கொடுக்கும்படி செய்தார்கள்.